விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 078 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 23 சனிக்கிழமை (07.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

- பாலைதீவு அந்தோனியார் ஆலயத் திருவிழாவுக்கு -

# குருநகர் இறங்குதுறையிலிருந்து பயணித்த படகு கவிழ்ந்ததில் இருவர் உயிரிழப்பு

## 12 பேர் வைத்தியசாலையில் அனுமதி



(யாழ்ப்பாணம்)

பாலைதீவு அந்தோனியார் ஆலய திருவிழாவுக்குச் சென்ற படகு ஒன்று குருநகர் இறங்குதுறைக்கு அருகில் கவிழ்ந்ததில் இருவர் உயிரிழந்துள்ளனர். (04ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடு அனுப்புவதாகக்கூறி யாழில் ரூ.30 இலட்சம் மோசடி

### வைத்தியத் தம்பதியினர் மீது முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

வெளிநாடு அனுப்புவதாகத் தெரிவித்து யாழ்ப்பாணத்தில் 30 இலட்சம் ரூபாய் மோசடி செய்த தம்பதியினர் மீது முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, 15ஆம் பக்கம் பார்க்க

## அவசரகாலச் சட்டம் சபையில் நிறைவேற்றம்

(கொழும்பு)

பொது அவசரகால நிலையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட யோசனை 100 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. 15ஆம் பக்கம் பார்க்க

கப்பலிலிருந்து மீட்கப்பட்ட

# 208 ஈரானியர்களும் வெலிசர முகாமில்



(கொழும்பு)


ஈரானியக் கப்பலிலிருந்து மீட்கப்பட்ட 208 பேரும் வெலிசர முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (04ஆம் பக்கம் பார்க்க)

மல்லாவியில்

## துப்பாக்கி வெடித்ததில் இளைஞன் படுகாயம்

(மல்லாவி)

மல்லாவியில் நாட்டுத் துப்பாக்கி வெடித்ததில் 15ஆம் பக்கம் பார்க்க



## இலங்கை நிலம் எவருக்கும் போர்க்களம் அல்ல

### நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

(கொழும்பு)

இலங்கையின் நிலம் எவருக்கும் போர்க்களம் அல்ல. இலங்கையின் நிலம், வான்பரப்பு அல்லது கடல் எல்லைகளை எந்தவொரு 15ஆம் பக்கம் பார்க்க

இலங்கையிலுள்ள

## அமெரிக்கர்களுக்கு விசேட அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள அமெரிக்கப் பிரஜைகளுக்காக இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதரகம் விசேட அறிவித்தல் ஒன்றை விடுத் 15ஆம் பக்கம் பார்க்க

காங்கேசன்துறை – நாகப்பட்டினம்

## பயணிகள் கப்பல் சேவை நேற்று முதல் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பருவகால மழை மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த காங்கேசன்துறை - நாகப்பட்டினத்திற்கு இடையேயான பயணிகள் படகுச் சேவையானது நேற்று மீண்டும் ஆரம்பமானது.

தமிழ்நாடு நாகப்பட்டினத்திலிருந்து நேற்றுக் காலை 15ஆம் பக்கம் பார்க்க

## ஈரான் கப்பல் விவகாரத்தில் இந்தியா தப்பியது; இலங்கை சிக்கியது

### எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு



(கொழும்பு)

இந்தியாவின் அழைப்பின் பேரில் வந்த ஈரான் கப்பலை இந்தியா நினைத்திருந்தால், அங்கு நிறுத்தி வைத்திருக்கலாம். இந்தியாவுக்கு அதற்கான 16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நின்று காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்

(இன்றும், நாளையும்)

- வடமாகாண அலுவலக பணியாளர் (OES)
- கிராம அலுவலர் (GS)
- ஆசிரியர் சேவை (SLTS)
- அதிபர் சேவை (SLPS)

வளவாளர்கள் :
P.கமலதாசன், T.தவசேகர் மற்றும் வளவாளர்கள்

- யாழ். நகர் – யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புகள் பிரிவு (யாழ். ஆஸ்பத்திரி வீதியில் கொமர்ஷல் வங்கி அருகில்) சனி, ஞாயிறு 8.30 am
- நெல்லியடி – சதாபொன்ஸ் மாலுசந்தி சனி 4.30 pm, ஞாயிறு 2.00 pm
- கிளிநொச்சி – எடிசன் கல்லூரி, கனகபுரம் சனி 1.30 pm
- வவுனியா – சன்பிறிற்றிஸ் கல்லூரி (புகையிரத நிலையம் அருகில்) ஞாயிறு 8.30 am

(6991)

076 688 3394, 077 526 5344

## நிரு ரீயூசன் சென்ரர் – கோண்டாவில்

# A/L 2028

## கலை,வர்த்தகம்

ஆரம்பம் 08.03.2026 (ஞாயிறு)

- கலைப் பிரிவு – காலை 8 மணி
- வர்த்தகப் பிரிவு – மாலை 3 மணி

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)

(6986)

077 796 0138

## A/L ICT வகுப்புக்கள்.திரு.இ.குமரன்

A/L 2028
New Batch Starts on 7/3/2026, Saturday at 4 pm

A/L Repeat Batch
100% Practical

A/L 2026
Python Programming
Web development
Paper Class

A/L 2027
Computer Networks

(2114)

வடக்கில் ICT பாடத்தில் அதிக A சித்தி பெறும் ஒரே நிறுவனம்
ICT துறையில் 24 வருட கற்பித்தல் அனுபவம்

MIS ICT COLLEGE TP:0776577359, #74, Sabapathy Lane, Jaffna.

## வருடாந்தப் பொதுக்கூட்டம் 2026

ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் 2026ம் ஆண்டுக்கான வருடாந்த பொதுக்கூட்டத்திற்கு அனைத்து உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

காலம் : 28.03.2026 சனிக்கிழமை
நேரம் : பி.ப 4.00 மணி
இடம் : ஞானசம்பந்தர் கலைமன்ற மண்டபம்

ஞானசம்பந்தர் கலை மன்றம்,
புலோலி வடக்கு, பருத்தித்துறை.

நிர்வாகம்

(C-5146)


# விஜித ஹேரத் - ஜெய்சங்கர் நேற்று கலந்துரையாடல்

இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்சங்கர் ஆகியோருக்கிடையே கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.



இது தொடர்பில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் இட்டுள்ள எக்ஸ் தள பதிவில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் போது இரு தரப்பு உறவுகள் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதுதவிர, பிராந்திய நிலைமைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளன. (ம-7)


## தேவை

வெளிநாட்டிலிருந்து வந்து இங்கே தனியே வாழ்ந்து கொண்டிருக்கும் 60 வயதான சிறு வர்த்தகருக்கு அவருடைய தனிமையைப் போக்குவதற்கும் அவருக்கு உதவி புரிவதற்கும் 45 வயதுக்கு மேற்பட்ட குடும்பப் பொறுப்புகள் ஏதேனும் இல்லாத ஒரு நண்பர் தேவைப் படுகிறார். அப்படி முன்வருபவரின் ஈடுபாடு, நம்பிக்கை, நேர்மையான குணம் என்பன வற்றைப் பொறுத்து உரிய சம்பளம் (உணவு, இருப்பிட வசதி உட்பட) தீர்மானிக்கப்படும். உண்மை, நேர்மை, விசுவாசம் ஆகியன மாத்திரம் கவனத்திற்கு எடுக்கப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்

தொ.பே.இல : 070 640 4691

(6972)

## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastrtis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான
மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால்
ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.

Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669

(6990)

## உதவி ஆசிரியர் தேவை

யாழ். நகர பாடசாலையில் தரம் 3,5 கல்வி பயிலும் மாணவிகளுக்கு கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்த பெண் உதவி ஆசிரியர் தேவை.
முன்பள்ளி டிப்ளோமா பூர்த்தி செய்தவர்கள் விரும்பத்தக்கது
அனுபவம் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.
ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு : 077 238 0196

(C-5148)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 06.02.2026 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

### அமரர் அம்பலவி அரியரத்தினம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (08.03.2026) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் குரும்பைகட்டி ஞானவைரவர் ஆலய வளாகத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் தொடர்ந்து எமது இல்லத்தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளும்படி அன்போடு கேட்டுக்கொள்கின்றோம்.

குரும்பைகட்டி,
புலோலி தென்மேற்கு,
புலோலி.

தகவல் :
குடும்பத்தினர்
078 543 8054

(C-5145)

## உருத்திரபுரீஸ்வரர் ஆலய பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

பிரதேச செயலாளரின் 2026.03.05 திகதிக் கடிதத்திற்கு அமைவாக ஆலயத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெறும் என்பதை அனைத்து சிவாலய அடியவர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

இடம் : உருத்திரபுரீஸ்வரர் ஆலயம்
உருத்திரபுரம், கிளிநொச்சி
காலம் : 2026.03.27 (வெள்ளிக்கிழமை)
நேரம் : மு.ப 10.30

உற்சவகால செயற்குழு,
உருத்திரபுரீஸ்வரர் ஆலயம்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

(C-5147)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

## 8வது கிளை

## புதுக்கடை திறப்பு விழா

மலிவு விலையில் கோழிகள், முட்டைகள்
07.03.2026 முதல் வசாவிளான் பாடசாலை முன்பாக
பலாலி வீதியில் கடை திறந்துள்ளோம்.

| | |
|---|---|
| 1 கிலோ புறோயிலர் | - 1100/= |
| 1 கிலோ கல்பேட்ஸ் | - 1250/= |
| 1 கிலோ பேரன்ஸ் | - 1350/= |

இவை அனைத்தும் இன்று முதல் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

உரிமையாளர் - தே.கலைத்தாசன்

நியூ சிற்றி பாம் நியூ சிற்றி கோழிக் கடை

(6992)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈரான் கப்பல் விவகாரம்

# சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக இலங்கை செயற்பட்டுள்ளது

### சட்டத்தரணி பிரதீபா மஹாநாமஹேவா விளக்கம்



(கொழும்பு)

**ஈரான் கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்ட விவகாரத்தின்போது இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டங்களுக்கு அமைய செயற்பட்டதாக சட்ட வல்லுநரும் மனித உரிமை செயற்பாட்டாளருமான பேராசிரியர் சட்டத்தரணி பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.**

இலங்கை அரசாங்கம் சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக மனிதாபிமான அடிப்படையில் இந்த விவகாரத்தை கையாண்டது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் எந்த ஒரு தரப்பினரும் அல்லது எந்த ஒரு நாடும் இலங்கை மீது அழுத்தம் செலுத்த முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ஐக்கிய நாடுகள் அமைப்பின் உறுப்பு நாடுகளில் ஒன்று. மேலும், இலங்கை 1949 ஆம் ஆண்டு ஜெனீவா இரண்டாம் பிரகடனத்தில் கையொப்பமிட்டு அங்கீகரிக்கப்பட்ட நாடு.

இதன்படி ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் கப்பல் ஒன்று மூழ்கும் போது மோதலினால் அவ்வாறு கப்பல் மூழ்கினாலும் கப்பலில் இருப்பவர்களை மனிதாபிமான அடிப்படையில் மீட்க வேண்டியது அவசியமானது எனவும், அதுவே சர்வதேச சட்டமாகும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கை இந்தப் போரில் பங்கெடுக்கவில்லை என்றாலும் சர்வதேச சட்டத்தின் அடிப்படையில் செயற்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். போரில் கப்பலில் சிக்கியிருந்த நபர்களைப் பாதுகாக்கும் அல்லது மீட்கும் சட்ட ரீதியான பொறுப்பு இலங்கைக்கு உண்டு.

எனவே இந்த மனிதாபிமான செயற்பாட்டை எவராலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார்.

ஈரான் கப்பல் தாக்குதலுக்கு இலக்கான சந்தர்ப்பத்தில் இலங்கை நடந்து கொண்ட விதம் தொடர்பில் எவரேனும் விமர்சனங்கள் முன் வைத்தால் அவர்களுக்கு சர்வதேச சட்டம் மற்றும் சர்வதேச சமுத்திர சட்டம் என்பன தொடர்பில் எந்த விதமான அறிவும் கிடையாது என்று அர்த்தம் என பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்துள்ளார். (நி)

# அநுர அரசின் தீர்மானத்தை வரவேற்கும் நாமல் ராஜபக்ச



(கொழும்பு)

ஈரான் கடற்படைக் கப்பல் 'ஐரிஸ் புசியர்' இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து திருகோணமலை துறைமுகத்தில் தரிப்பதற்கு அனுமதி வழங்கிய தீர்மானத்தைப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச வரவேற்றுள்ளார். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் மனிதாபிமான காரணங்களின் அடிப்படையில் அந்தக் கப்பலில் இருந்த 208 கடற்படை வீரர்களை கொழும்பிற்கு கொண்டு வர அனுமதி வழங்கியிருந்தது.

சமூக ஊடக தளம் எக்ஸ் இல் வெளியிட்ட பதிவில் நாமல் ராஜபக்ச, இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

பிராந்தியத்தில் நிலவி வரும் மோதல் சூழ்நிலையில் இலங்கை தன்னுடைய நடுநிலைக் கொள்கையை பேணுவது மிகவும் முக்கியமானது என்பதை இந்த முடிவு வெளிப்படுத்துகிறது எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சர்வதேச சட்டத்தின் கீழ் இலங்கை மேற்கொள்ள வேண்டிய கடமைகளை மதிப்பதுடன் தேவையான சந்தர்ப்பங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்குவது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

# லிட்ரோ எரிவாயு

## விலையில் மாற்றமில்லை




(கொழும்பு)

மார்ச் மாதத்திற்கான உள்நாட்டு எரிவாயு விலையில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதத்திலும் எரிவாயு விலையில் திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையில், இரண்டாவது மாதமாக விலையில் மாற்றமின்றி விற்பனை செய்யப்படவுள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் சந்தையில் எரிவாயு சிலிண்டர்கள் பின்வரும் விலைகளில் விற்பனை செய்யப்படும்;

12.5 கிலோகிராம் கொள்கலன்: ரூபா 3,690, 5 கிலோகிராம் கொள்கலன்: ரூபா 1,482, 2.3 கிலோகிராம் கொள்கலன்: ரூபா 694.

மார்ச் மாதத்திற்காக மொத்தம் 38,000 மெட்ரிக் தொன் எரிவாயு உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் முதற்கட்டமாக 7,800 மெட்ரிக் தொன் எரிவாயு ஏற்கனவே நாட்டிற்கு வந்தடைந்துள்ளது.

எஞ்சிய 30,200 மெட்ரிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் தற்போது மாலைதீவு கடற்பரப்பில் தயார் நிலையில் உள்ளது. அங்கிருந்து தேவையான கையிருப்பு உடனுக்குடன் நாட்டிற்கு கொண்டுவரப்படும்.

இதன் மூலம் எதிர்வரும் பண்டிகைக் காலங்களில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பில்லை என நிறுவனம் உறுதிபடத் தெரிவித்துள்ளது. (நி)

# அடக்குமுறையா? ஆதாரத்துடன் நிரூபியுங்கள்

## பிரதமர் ஹரிணி சவால்

(கொழும்பு)

அவசரகால சட்டத்தின் ஊடாக நாட்டில் இடம்பெற்ற அடக்குமுறை சம்பவத்தை வெளிப்படுத்துமாறு பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது. இதன் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அடக்குமுறை என்பது என்ன? "அடக்குமுறை, அடக்குமுறை" என்று வெறுமனே கூறிக் கொண்டிருக்காது. உண்மையில் அடக்குமுறை இடம்பெற்ற சம்பவங்களை எங்களிடம் முன்வையுங்கள்.

இந்த மூன்று மாத காலத்திற்குள் அந்தச் சம்பவங்கள் எங்கே நடந்தன? யாராவது அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டார்களா? இந்த விதிமுறைகளின் கீழ் யாரேனும் கைது செய்யப்பட்டார்களா? அவற்றை எங்களிடம் முன்வையுங்கள்.

அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் அடக்குமுறை கையாளப்படுகின்றது எனவும் ஜனநாயகத்திற்கு சவால் விடுக்கப்படுகிறது என்றும் எதிர்க்கட்சியினர் தொடர்ந்து குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய நாம் எதிர்க்கட்சியில் இருந்த போது அவசர காலச் சட்டத்தை எதிர்த்தோம்.



அந்தச் சந்தர்ப்பங்களில் அவசர காலச் சட்டத்தின் மூலம் அடக்குமுறைகள் திட்டவட்டமாக நடந்த போதுதான் நாம் அதை எதிர்த்தோம். அதற்கான உதாரணங்கள் எங்களிடம் இருந்தன, சாட்சிகள் இருந்தன, சம்பவங்களை எங்களால் விபரிக்க முடிந்தது. அதன் அடிப்படையில் தான் நாம் எதிர்த்தோம் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# மின்சார சபை மறுசீரமைப்பு

## அதிவிசேட வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

இலங்கையின் மின்சக்தி துறையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் நாளை மறுதினம் மார்ச் 9 ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிசக்தி அமைச்சரினால் வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின்படி, இந்தச் சட்டத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளைத் தவிர ஏனைய அனைத்துப் பிரிவுகளும் நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வருகின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சிதானந்தம் ஞாபகார்த்த கிண்ணம் யூத் பாய்ஸ் அணியினர் வசம்







சச்சிதானந்தம் அவர்களின் நினைவாக நடத்தப்பட்ட மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த மாதம் 28 ஆம் திகதி கோவிலாக் கண்டியில் அமைந்துள்ள யூத் பாய்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டியில் கோவிலாக்கண்டி பவர் கிட்டர், யூத் பாய்ஸ், யூத் ரைடர்ஸ், 11 ஈகிள் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இறுதிப் போட்டியில் யூத் பாய்ஸ் அணியை எதிர்த்து யூத் ரைடர்ஸ் அணி மோதியிருந்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யூத் ரைடஸ் அணியினர் 8 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

துடுப்பாட்டத்தில் அச்சு 56 ஓட்டங்களையும் ராகுலன் 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் யூத் பாய்ஸ் அணி சார்பில் ஜெனி 2 விக்கெட்டுக்களையும் சஞ்சு மற்றும் நரிஷ் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருந்தனர்.

96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யூத் பாய்ஸ் அணியினர் 7.1 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை கடந்தனர்.

துடுப்பாட்டத்தில் சுதர்சன் 48 ஓட்டங்களையும் ஜெனி 37 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றிருந்தனர். பந்து வீச்சில் ஜெசி 2 விக்கெட்டுக்களையும் அச்சு ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

# பாடசாலைகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடர்

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி சம்பியன்



இலங்கைப் பாடசாலைகள் கால்பந்தாட்ட சங்கம் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தும் 12 வயதுப் பிரிவினருக்கான Future Soccer Kings "SAHA YARAJAH CHALLENGE TROPHY" கிண்ணத்துக்கான கால்பந்தாட்ட போட்டிகள் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்களும் இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய கல்லூரிக்கும் இடையில் நடை பெற்ற இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி நெல்லியடி மத்திய கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியனானது.

இதற்கு முன்னர் இடம் பெற்ற முதலாவது குழுப் போட்டியில தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியை 8:0 என்ற கோல் கணக்கிலும் இரண்டாவது போட்டியில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை 1:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்று குழுச் சம்பியனாக வந்த சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் காலிறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கிலும் அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை 4:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (3)

## ரஷித் கான் நீக்கம்

# ஆப்கானிஸ்தான் ரி-20 அணிக்கு புதிய தலைவர் நியமனம்




2026 ரி-20 உலகக் கிண்ணத்தில் ஆப்கானிஸ்தான் அணிலீக்சுற்றுடன் வெளியேறியதைத் தொடர்ந்து, அந்த அணியின் ரி-20 தலைவர் பதவியிலிருந்து ரஷித் கான் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளார்.

உலகக் கிண்ணத்தில் குரூப் "டி" பிரிவில் விளையாடிய ஆப்கானிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் கனடா ஆகிய அணிகளை வீழ்த்திய போதிலும், தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகளிடம் தோல்வியடைந்ததால் சூப்பர் 8 சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்தது.

இந்தத் தோல்வியைத் தொடர்ந்து அணியை மறுசீரமைக்கும் நோக்கில், அதிரடித் தொடக்க ஆட்டக்காரர் இப்ராஹிம் சத்ரான் புதிய ரி-20 தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் மார்ச் 13 ஆம் திகதி இடம்பெறவுள்ள இலங்கைக்கு எதிரான மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் ஆப்கானிஸ்தான் அணியை இப்ராஹிம் சர்த்ரான் வழிநடத்துவார்.

ரஷித் கான் தொடர்ந்து அணியின் நட்சத்திர பந்துவீச்சாளராக நீடிப்பார் எனவும், புதிய தலைமைப் பயிற்சியாளர் ரிச்சர்ட் பைபஸ் மற்றும் புதிய முகாமைத்துவத்தின் கீழ் இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. (3)

## குருநகர்...

இதில் படகு உரிமையாளரும் படகு ஓட்டியுமான நாவற்குழி கைதடியைச் சேர்ந்த பிரான்சிஸ் ரீபன் (வயது - 57) மற்றும் குருநகரைச் சேர்ந்த இமானுவேல் யோசப் (வயது - 84) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

பாலைதீவு அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் இன்று சனிக்கிழமை (07) காலை இடம்பெறவுள்ளது.

இதற்கு யாழ்ப்பாணம் குருநகர் இறங்கு துறையில் இருந்து பலரும் சென்று வருவது வழமை. அந்தவகையில் நேற்று வெள்ளிக்கிழமை (06) காலை குருநகர் இறங்குதுறையிலிருந்து புறப்பட்ட படகே விபத்துக்குள்ளானது.

அப்படகில் மாத்தறையைச் சேர்ந்த நால்வர் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் உட்பட சுமார் 25 பேர் பயணித்துள்ளனர்.

படகு புறப்பட்டு ஒரு மணித்தியாலத்தில் புரண்டு விபத்துக்குள்ளானது.

இதில் 12 வயதுச் சிறுவன் 5 பெண்கள் உட்பட 12 பேர் பாதிக்கப்பட்ட நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரு பெண்கள் செயற்கை சுவாசத்துடன் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படகு விபத்துக்குள்ளானவுடன் முதலாவது தகவலாக செய்தி அறிந்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் வடமாகாண கடற்படைத் தளபதிக்கு தகவலை வழங்கியதன் மூலம், மண்டைதீவு மற்றும் சீநோர் பகுதியிலிருந்து துரிதமாகச் செயற்பட்ட கடற்படையினர் மீட்புப்பணியில் ஈடுபட்டனர். இதே வேளை அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளருடன் தொடர்பு கொண்ட போது இவ்விடயம் தொடர்பாக தாம் உடனடியாக அம்புலன்ஸ் வண்டிகளை சம்பவ இடத்திற்கு அனுப்பி வைத்துள்ளதாகப் பணிப்பாளரால் தெரிவிக்கப்பட்டது.(ம-7,33,60,104)

## 208 ஈரானிய...

இந்திய கடற்படையால், பெப்ரவரி 15 - 25 ஆம் திகதி வரை விசாகபட்டினத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சர்வதேச கடற்படை கண்காட்சியில் பங்குபற்றிய ஈரான் கடற்படை கப்பல்களில் ஒன்றான ஐ.ஆர்.ஐ.எஸ்.புஷேஹர் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டு, பின்னர் திருகோணமலை துறைமுகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

குறித்த கண்காட்சியில் பங்கேற்று மீண்டும் நாடு திரும்பிக் கொண்டிருந்த ஈரானியக் கடற்படைக் கப்பலான ஜரிஸ் டெனா என்ற போர்க்கப்பல் இந்து சமுத்திர பிராந்தியத்தில் கடந்த 4ஆம் திகதி அமெரிக்காவின் நீர்மூழ்கிக் கப்பலால் தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.

இந்நிலையிலேயே பாதுகாப்பு அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு ஐ.ஆர். ஐ.எஸ்.புஷேஹர் போர்க் கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு வருவதற்கு வெளிநாட்டலுவல்கள் அமைச்சிடம் அனுமதி கோரியிருந்தது. எவ்வாறிருப்பினும் இலங்கையின் கடல்சார் வர்த்தக பாதிப்புக்களைக் கருத்திற் கொண்டு அக்கப்பலிலுள்ளவர்களை மீட்டு, பின்னர் கப்பல் திருகோணமலை துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அரசாங்கம் அனுமதியளித்தது.

அதற்கமைய அந்தக் கப்பலிலிருந்த 208 பேர் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு இலங்கை கடற்படையினரால் கொழும்புத் துறைமுகத்துக்கு பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டனர். இவ்வாறு அழைத்து வரப்பட்டவர்களில் 53 அதிகாரிகளும் 84 கெடட் அதிகாரிகளும் 48 சிரேஸ்ட கடற்படையினரும் 23 கடற்படையினரும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மருத்துவ பரிசோதனைக் குட்படுத்தப்பட்டு, பின்னர் வெலிசரயிலுள்ள கடற்படை முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் கமாண்டர் புத்திக சம்பத் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதிர்வரும் வாரங்கள் இலங்கைக்கு முக்கியமானவை

(கொழும்பு)

மத்திய கிழக்கில் அதிகரித்து வரும் இராணுவ பதற்றங்கள் காரணமாக, எதிர்வரும் வாரங்கள் எமது நாட்டிற்கு ஒரு தீர்க்கமான காலகட்டமாக இருக்கக்கூடும் என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர நேற்று தெரிவித்தார்.

இது தொடர்பில் பாராளு மன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் மத்திய கிழக்கு மோதல்களினால் எதிர்காலத்தில் அத்தியாவசிய சேவைகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய மோதலின் விளைவாக கடல் மற்றும் விமானப் போக்குவரத்துப் பாதைகளில் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளே இந்த சாத்தியமான இடையூறுகளுக்குக் காரணம்.

மேலும், இந்த உலகளாவிய சவால்களுக்கு மத்தியில் அத்தியாவசிய சேவைகளைத் தடையின்றி வழங்குவதை உறுதி செய்வதற்காக தற்போதைய அவசரகால நிலையை நீட்டிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி)

# INVITATION FOR BID 2026/01
# DELFT PRADESHIYA SABHA PSDG - 2026

1. The **Chairman, Local Authority Procurement Committee**, on behalf of the Delft Pradeshiya Sabha invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via Council.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of highway construction for grade mentioned in the table below.
   Qualification' requirements are indicated in section 4 of the **Procurement document**. Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 3 Documents.
4. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the Procurement documents at the same place on any working days from **2026-03-09 To 2026-03-23** during **09:00 hrs and 14:00 Hrs**.
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Delft Pradeshiya Sabha (T. P:0212215211, e.mail: tsecretarydelft@yahoo.com) from 9:00 hrs to 14:00 Hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below.** The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Local Authority Procurement Committee, Delft Pradeshiya Sabha on or before as stated in table below.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Delft Pradeshiya Sabha as stated in table below.**
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **Document Issuing/Purchasing Period** | | | | | | **from 2026-03-09 To 2026-03-23** | | |
| | **Pre-Bid Conference** | | | | | | **At 10.30 A.M on 2026-03-16** | | |
| | **Closing and Opening of Bids** | | | | | | **At 2.30 P.M on 2025-03-23** | | |
| **Bid ID** | **Description of Work** | **Estimated Cost (Rs.) In Million (without VAT)** | **Contract Period (Days)** | **Grade Required** | **Non-Refundable Fee (Rs.)** | **Bid Validity** | | **Required Bid Security/ Bank Draft/ Security Deposit** | |
| | | | | | | **Bid Validity Period** | **Bid Validity date** | **bid Security Amount (Rs.)** | **bid Security Validity Period** |
| NP/14/41(7)/2/PSDG/2026/01 | **Reconstruction of Market Road at Delft** | **2.775** | **88** | **C9** | **3000.00** | **49 days** | **11.05.2026** | **30000.00** | **08.06.2026** |

**Chairman,**
**Local Authority Procurement Committee,**
**Delft Pradeshiya Sabha.**

(C-5143) 07.03.2026

# பிறந்த தின வாழ்த்தும் மணி விழா பாராட்டுக்களும்

திருமதி. **விஜயகுமாரி சிவபாலன்**

**(ஆரம்பக்கல்வி ஆசிரியர், பகுதித் தலைவர், பிரதி அதிபர்)**

(Primary Trained, B.Ed., SLTS-I)



## சேவை விபரம்

- யா/செம்பியன்பற்று அ.த.க பாடசாலை
  17.08.1988 - 05.01.1991
- யா/கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
  06.01.1991 - 31.12.1992
- யா/செம்பியன்பற்று அ.த.க பாடசாலை
  01.01.1993 - 29.09.1996
- மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை
  30.09.1996 - 31.12.2002
- யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
  01.01.2003 - 31.12.2013
- யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்
  01.01.2014 - 22.01.2014
- யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை
  23.01.2014 - 06.03.2026

**இறைபணியாம் ஆசிரியப் பணியை இனிது நிறைவுசெய்து அகவை அறுபது காணும் நன்னாளில் அகம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.**

**வாழ்த்துவோர்**- ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையில் 12 வருடங்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் ஒன்றரை வருடங்கள் பிரதி அதிபராகவும் கடமையாற்றி 06.03.2026இல் ஓய்வுபெறும் திருமதி விஜயகுமாரி சிவபாலன் அவர்கள் ஒரு சிறந்த ஆரம்பக்கல்வி ஆசிரியர். தனது கற்பித்தலில் முழுமூச்சாகச் செயற்பட்டவர். ஓய்வுபெறும் காலத்தை அண்மித்துக் கூடி தரம் 5 மாணவர்களுக்கான மேலதிக பயிற்சி வகுப்புக்களை விடுமுறைக்காலத்தில் எடுத்துவந்த ஆசிரியர். இவர் அர்ப்பணிப்பு மிக்க ஆசிரியர் மாத்திரமன்றி நேர்மை, பொறுமை, அடக்கம் போன்ற பண்புகளில் சிறந்து விளங்கியவர். அதிபருக்கு உறுதுணையாக செயற்பட்டு பாடசாலையைக் கட்டிக்காத்து வந்தவர். பாடசாலையில் நடக்கும் அனைத்து விழாக்களிலும் நேரகாலம் பாராது முன்னின்று உழைத்த பெருமைக்குரியவர். இவர் நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் மாணவர்களை தனது பிள்ளைகள் போல கவனித்து வந்தமையால் அவரது வகுப்பு மாணவர்களின் பெற்றோர்களால் பெரிதும் மரியாதைக்குரிய ஆசிரியராக மதிக்கப்படுபவர். மேலும் தன்னலமற்ற, புகழை விரும்பாத, கடமையை கண்ணாக மதித்துச் செயற்பட்ட ஆசிரியர் இவர் என்றால் அது மிகையாகாது. அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். மேலும் எமது பாடசாலைக்கு தொடர்ந்தும் தங்களின் அளப்பரிய ஆலோசனைகள், வழிகாட்டல்களை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. மைதிலி ஸ்ரீஸ்கந்தராசா**
**அதிபர், யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலை.**

## பழைய மாணவர் சங்க உபதலைவரின் வாழ்த்துச் செய்தி

யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையில் பன்னிரண்டு வருடங்கள் ஆரம்பப் பிரிவில் கடமையாற்றி மணிவிழாக் காணும் திருமதி. விஜயகுமாரி சிவபாலன் அவர்களை வாழ்த்துவதில் மிக மகிழ்வடைகிறேன். ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு தனது அளப்பரிய சேவையை நல்கிய சிறந்த ஆசிரியர். மாணவர்களுக்கு நல்வழிகாட்டியாகவும் தாய்மை எனும் உணர்வுடன் அன்பு கலந்த பாசத்தையும் வழங்கி நல்மாணவர்களை உருவாக்கியவர். தன் அர்ப்பணிப்பான கற்பித்தல் பணியோடு இறுதி ஒன்றரை ஆண்டுகள் பிரதி அதிபர் பதவியையும் வகித்து பாடசாலையின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி புரிந்துள்ளார். ஆசிரியப் பெருந்தகை அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்வாக அமையவும் நிறைந்த சுகத்துடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ இறையருள் கிடைக்க வேண்டுகிறேன்.

**திருமதி. சி.பத்மநேசன். (உப தலைவர், பழைய மாணவர் தாய்ச்சங்கம்)**

(C-5144)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 500 லீற்றர் மண்ணெண்ணெயுடன்

# யாழில் வசமாக சிக்கிய நபர்

**(யாழ்ப்பாணம்)**

**யாழில், பதுக்கலுக்காக கொண்டு செல்லப்பட்ட பாரியளவான எரிபொருட்கள் பருத்தித்துறை பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையினால் கைப்பற்றப்பட்டுள்ளது.**



யாழில், பதுக்கல் மற்றும் கள்ள சந்தையில் விற்பனை செய்வதற்காக கொண்டு செல்லப்பட்ட சுமார் 500 லீற்றர் மண்ணெண்ணெய், அதனைக் கொண்டுசென்ற வாகனம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது வாகனத்தை செலுத்திய சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க தலைமையிலான குழுவினரால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைப்பற்றப்பட்ட வாகனம் மற்றும் எரிபொருள் என்பவற்றுடன் வாகன சாரதியை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பருத்தித்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (3-104-60)

# நோன்பு தினத்தை முன்னிட்டு வீதி மின்விளக்குகள் திருத்தம்

## மாநகர முதல்வர் நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

முஸ்லிம்களின் புனித நோன்பை முன்னிட்டு யாழ்ப்பாணம் பழைய சோனக தெரு 13ஆம் வட்டாரத்தின் முஸ்லிம் மாநகரசபை உறுப்பினர்களின் கோரிக்கையில் முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந் தராசாவின் விசேட உத்தரவில் வீதி மின் விளக்குகள் திருத்தம் நடைபெற்றது.

நோன்பு ஆரம்பத்தை முன்னிட்டு பெப்ரவரி 17 இலும், நோன்பின் இடைப்பகுதியில் நேற்று முன்தினம் இரண்டு கட்டங்களாக இவ் வீதி பொது மின் விளக்குகள் திருத்தம் செய்யும் பணிகள் இடம்பெற்றன.

இரவு நேர தொழுகைகளை முன்னிட்டு பள்ளிவாசல் முன்றல், பள்ளிவாசல் வரையான முக்கிய வீதிகள், உள் ஒழுங்கைகள், பிரதான வீதி மின் விளக்குகள் என முக்கிய இடங்களில் மின் விளக்குகள் திருத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (3)

# இல்ல மெய்வன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை8.30 மணிக்கு கல்லூரி அதிபர் தி.வரதன் தலைமையில் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக, வைத்தியரும் பழைய மாணவருமான ரி. நந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி W.M. உதயபாலா மற்றும் வலிகாமம் கல்வி வலய உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ந. கஜேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக ஓய்வுபெற்ற அதிபர் எஸ். அன்ரன், பிரான்ஸ் பழைய மாணவர் சங்க உறுப்பினர் ராஜகரன் மற்றும் ஐக்கிய ராச்சி பழைய மாணவர் சங்க உறுப்பினர், ந.வினோதன் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

# குட்டியப்புலம் அ.த.க பாடசாலையில் சாதனையாளர்கள் கௌரவிப்பு



(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் யா/குட்டியப் புலம் அ.த.க பாடசாலையில் இருந்து தேசிய ரீதியிலும், மாகாண ரீதியிலும் வெற்றி பெற்ற மாணவர் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை பாடசாலை முதல்வர் திருமதி நளாயினி சஞ்சீவன் தலைமையில் இடம் பெற்றது.

இதில் கல்வி அமைச்சின் விஞ்ஞான கிளையும், இலங்கை விஞ்ஞான வளர்ச்சி முன்னேற்ற சங்கமும் இணைந்து நடத்திய இளம் விவசாய விஞ்ஞானி போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவி க.நதீனா மற்றும் மாகாணமட்ட விசேட தேவை உடைய மாணவர் தடகளப் போட்டியில் 100 மீற்றர், 80 மீற்றர், நீளம் பாய்தல் என்பவற்றில் வெற்றி பெற்ற செ. பவித்ரா ஆகிய மாணவர்கள் நினைவுக் கேடயம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். (3-33)

# பகிரங்க ஏல விற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், துவிச் சக்கர வண்டிகள், கைத் தொலைபேசிகள், சவள்கள், கோடரிகள் மற்றும் இதர பொருட்கள் என்பன எதிர்வரும் 14 ஆம் திகதி காலை 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

குறிப்பிட்ட பொருட்கள் சம்பந்தமாக உரிமை கோருபவர்கள் இருப்பின் ஏல விற்பனை ஆரம்பிப்பதற்கு முன்னர் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.


ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் பொருட்களினை பதிவாளரின் அனுமதியுடன் பொதுமக்கள் பார்வையிட முடியுமென்பதுடன் ஏலவிற்பனையில் பங்குபற்றுபவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமூகமளித்தல் வேண்டும்.

ஏலவிற்பனையின் போது மதிப்பிடப்பட்ட விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

அத்துடன் ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக பணத்தினைச் செலுத்தி ஏலப்பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் செலுத்துதல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனவும் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (3)

# கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின்

## விரிவுரையாளராகி ஈழத்தமிழ்ப்பெண் சாதனை




(லண்டன்)

ஈழத்து மண்ணின் போர்க்காலத் துயரங்களுக்கு மத்தியில் சிறைச் சாலையில் நான்கு சுவர்களுக்குள் ஒரு விடியலாகப் பிறந்தவர் கிளிநொச்சியைச் சேர்ந்த ராஜினி சந்திரசேகரம்.

வறுமையும் இடம்பெயர்வும் போராட்டக்கால இடர்களும் அவரை முடக்க நினைக்கவில்லை. மாறாக கல்வியையே தனது ஆயுதமாக ஏந்தி இன்று லண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகத் தடம்பதித்து, ஈழத்துத் தமிழ் பெண்களின் விடாமுயற்சிக்கு ஒரு வாழும் சான்றாகத் திகழ்ந்துள்ளார்.

உலகப் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் நரம்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றதுடன் தனது ஆய்வுகள் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தொகுத்து கேம்பிரிட்ஜ் நூலகத்திற்காக ஒரு முக்கிய மான அறிவியல் நூலையும் எழுதியுள்ளார். (3)

# வடமாகாண தொழில் முனைவோர் விருதுகள்

(யாழ்ப்பாணம்)

வர்த்தக தொழிற்துறை மன்றம் யாழ்ப்பாணம் மற்றும் தேசிய தொழில் முயற்சி அதிகார சபை இணைந்து நடத்தும் வடமாகாண தொழில்முனைவோர் விருதுகள் (2025) எதிர்வரும் 10 ஆம் திகதி மாலை 5.30 மணிமுதல் இரவு 9 மணி வரை கொக்குவிலில் அமைந்துள்ள செல்வா பலஸ் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (3)

# திரைப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் திரைப் படக் கழகத்தின் 25 ஆவது அழகர் சாமியின் 'குதிரை' திரைப்படக் காட்சியானது நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சத்தர்மடம், பலாலி வீதியிலுள்ள வீனஸ் மருத்துவமனைக்கு அருகில் அமைந்துள்ள "எங்கட புத்தகங்கள்" இல்லத்தில் திரையிடப்படவுள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எண்ணெய்க்காக இரத்தம் சிந்தாதே' கொழும்பில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு

(கொழும்பு)

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் அண்மையில் நடத்திய இராணுவத் தாக்குதல்களைக் கண்டித்து, "எண்ணெய்க்காக இரத்தம் சிந்தாதே" எனும் தொனிப்பொருளில் கொழும்பில் நேற்று ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீதான வான்வழித் தாக்குதல்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும், இப்பிராந்தியத்தில் நிலவும் மோதல்களை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வர வலியுறுத்தியும் ஏராளமான ஆர்வலர்களும் ஆதரவாளர்களும் இந்தப் போராட்டத்தில் திரண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் இலங்கையிலுள்ள ஈரான் தூதுவர் அலிரேசா டெல்கோஷ் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தவர்கள் அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளின் தாக்குதல்களைக் கண்டிக்கும் வகையிலான வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி, அமைதியான முறையில் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வுகாண சர்வதேச சமூகம் முன்வர வேண்டும் என இதன்போது கோசமிட்டனர்.

அப்பாவி மக்களின் உயிர்களைப் பழிவாங்கும் போர் நடவடிக்கைகளுக்கு எதிராகத் தங்களது கடும் கண்டனத்தைப் பதிவு செய்ததோடு, மத்திய கிழக்கில் நிலவும் போர்ப்பதற்றங்களுக்கு மத்தியில், இலங்கையில் ஈரானுக்கு ஆதரவாக இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# வீதியோட்ட நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/கோண்டாவில் இராம கிருஷ்ண மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியின் வீதியோட்ட நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 5.30 மணிக்கு அற்புதநர்த்தன விநாயகர் ஆலய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது. (3)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஞான வைரவ கோவிலடி சனசமூக நிலைய வருடாந்தப் பொதுச்சபை கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு சனசமூக நிலைய மேல் மண்டபத்தில் உப தலைவர் சிவஸ்ரீ பிரபுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெற உள்ளது. (3)


## கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை(வ/து) கூட்டுறவு முகாமைத்துவத்தில் உயர்தர சான்றிதழ் கற்கை நெறி ACCM விண்ணப்பம் கோரல்

**கல்வித் தகுதி:**
க.பொ. த (சா/த) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் தமிழ், கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். (குறைந்தது 5 பாடங்களில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் அவசியம்). அல்லது மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனத்தின் சான்றிதழ் பாடநெறியைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**தொழில் அனுபவம்:**
- கூட்டுறவு சங்க ஊழியர்கள் அல்லது நிர்வாக சபை உறுப்பினர்களுக்கு குறைந்தது 2 வருட அனுபவம்.
- தனியார்/வர்த்தகத் துறை ஊழியர்கள் அல்லது சிறு தொழில் முயற்சியாளர்களுக்கு குறைந்தது 3 வருட அனுபவம்.
- கூட்டுறவு கல்வியில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள் பொருத்தமான துறையில் 3 வருட அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.

**மேலதிக தகவல்**
- பயிற்சிக் கட்டணம் - இலவசம். பயிற்சிக் காலம்-06 மாதங்கள் (பயிற்சி நெறி வாரத்தில் 3 நாட்கள் வகுப்பறைக் கல்வி - 3 நாட்கள் கள ஆய்வுக் கல்வியாக நடைபெறும்)
- பயிற்சி நெறி 2026 சித்திரை மாத முதல் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது.
- பயிற்சி நிறைவில் கூட்டுறவுச் சங்கங்களில் தொழில் வாய்ப்புக்கான முன்னுரிமை

மேற்படி விண்ணப்பத்தினை சுயமாகத் தயாரித்து **தலைவர் ,கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை டிப்போ சந்தி, கிளிநொச்சி** என்ற முகவரிக்கு 20.03.2026ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**கிளிநொச்சி மாவட்ட கூட்டுறவு சபை.** (C-5140)



PEOPLE'S BANK Pride of the Nation

## கேள்விப்பத்திர அறிவித்தல் மக்கள் வங்கி

### சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ் பிராந்தியத்தைச் சேர்ந்த **யாழ்.ஸ்ரான்லி வீதி. தெல்லிப்பளை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை, கொடிகாமம்** ஆகிய கிளைகளிலும் **கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், காங்கேசன்துறை, உரும்பிராய், புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய்,அளவெட்டி, பலாலி, கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி** ஆகிய சேவை நிலையங்களிலும் **யாழ்.பிராந்திய தலைமைக் காரியாலயத்திலும்** சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 5000/= ஐ கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணமாக செலுத்துவதன் மூலம் 2026 பங்குனி 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 9.00-பி.4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர ஆவணங்களைப் பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச்செலுத்தப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களை பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2026 பங்குனி 25ஆம் திகதி புதன்கிழமை பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**இல: 82 கன்னாதிட்டி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Fax : 021-222 2602
E-mail jafrho@peoplesbank.lk
தொலைபேசி இலக்கம் : 021 222 2601
021 222 8602

(C-5141)



கைலாய பிள்ளையார் துணை

## வாரீர் திருவாசகம் ஓதி கையிலாயப்பிள்ளையார் கும்பாபிஷேகம் காண்போம்

நாளை 08.03.2026 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் மண்ணில் நல்லூர் பதியில் கையிலாயப் பிள்ளையார் கோவில் முன்றலில் திருவாசகம் முற்றோதல் செய்வோம் காலை- 7 மணி

**திருவாசகச் சிறப்பு**

**வருவாசகத்தினில் முற்றுணர்ந் தோனை**
**வன் தில்லை மன்னைத்**
**திருவாத வூர்ச்சிவ பாத்தியன் செய்திருச்**
**சிற்றம்பலம்**
**பொருளார் தருதிருக் கோவை கண்டேயு**
**மற்றப் பொருளைத்**
**தெருளாத வுள்ளத் தவர் கவிபாடிச்**
**சிரிப்பிப்பரே**

வருவாசகத்தினில் முற்றுணர்ந் தோனை,வண் தில்லை மன்னை, திருவாதவூர் அடிகளாகிய மாணிக்க வாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவை என்னும் தேனை நூலைக் கண்டபிறகும் அதன் பொருளைத் தெளிந்து கொள்ளாத மனமுடையவர்கள் கவிபாடி **சிரிப்புக்கு ஆளாவார்கள், இழக்கப்படுவார்கள்** என தேவாரத்திருமுறைகள் வெளிவரத் துணையுடன் அருளிய திருநம்பியாண்டர் நம்பி 1095 ஆவது 11 ஆம் திருமறையில் அருளியதைக் காணலாம்.

திருவாசகச் சிறப்பை மற்றவர்களுடன் பகிர்ந்து இறைவன் அருள்பெறுவோம்.

**கையிலாயப்பிள்ளையார்.**

சமயகுரவர் நால்வருள் 'தாண்டக வேந்தர்' என்னும் விருதுப்பெயரை உடையர் திருநாவுக்கரசு நாயனார். திருநாவுக்கரசு நாயனார் திருக்கைலாய திருத்தாண்டகம் என்னும் போற்றித் திருத்தாண்ட கங்கள் எனப்படும் மூன்று திருப்பதிகங்களை பாடியருளியுள்ளார். முதலாவது போற்றித் திருத் தாண்டகப் பதிகத்தை **"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி"** என ஆரம்பித்து **"கையிலை மலையானே போற்றி போற்றி"** என நிறைவுறும்.

அடுத்த பதிகம் **"பொறையுடைய பூமி நீரானாய் போற்றி"** என்று ஆரம்பித்து **"கையிலை மலையானே போற்றி போற்றி"** என நிறைவுறும், மூன்றாவது பதிகம் **"பாட்டான நல்ல தொடையாய் போற்றி"** என ஆரம்பித்து **"கையிலை மலையானே போற்றி போற்றி"** என நிறைவுறுகிறது.

சுந்தரமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்த பதிகத்தில் திருக் கையிலாயத்தை நொடித்தான் மலை எனப் போற்றுகிறார். அப்பதிகத்தில் இரண்டாம் பாடலில் இறுதியடியில் **"ஆனை அருள் புரிந்தான் நொடித்தான் மலை உத்தமனே"** எனவும், இப்பதிகத்தில் நான்காம் பாடலில் **"வேழம் அருள் புரிந்தான் நொடித்தான் மலை உத்தமனே எனவும் பிள்ளையாருடன் இணைத்து பாடியுள்ளார்.** அதுமட்டு மல்ல ஔவையாருக்கும் கையிலை வாழ்வை பிள்ளையார் அளித்தார் என புராணங்கள் கூறுகின்றன. எனவே தான் இவர் கையிலாயப்பிள்ளை யார் ஆவார்.

01.04.2026 தொடர்ந்து விநாயகர் அகவல் திருமுறைகள் ஓதுவோம்

**அனுசரணை**
**க.கு.க சிவபாலன்**
**சிவநெறிப்புரவலர்,களபூமி காரைநகர்,**


**அகில இலங்கை திருமுறை மன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-5142)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ட்ரம்பிற்கு பலத்த அடி
## சட்டவிரோத வரியை மீள செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு




(வோஷிங்டன்)
சட்டவிரோதமாக வசூலித்த வரியை திருப்பிச் செலுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அரசு நிர்வாகத்திற்கு அமெரிக்க வர்த்தக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது ட்ரம்ப் நிர்வாகத்திற்குப் பெரும் பின்னடைவாக பாரக்கப்படுகிறது.

பல்வேறு நாடுகளுக்கு பரஸ்பர வரி விதிப்பு என்ற பெயரில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கூடுதல் வரிகளை விதித்தார். இந்த வரி விதிப்புக்கு உலக நாடுகள் மட்டுமின்றி, உள் நாட்டிலும் கடும் எதிர்ப்புகள் வெளியாகின.

இதையடுத்து, பரஸ்பர வரி விதிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்று கூறி, அமெரிக்க உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்த நிலையில், சட்டவிரோதமாக மேலதிகமாக வசூலித்த வரியை, இறக்குமதியாளர்களுக்கு வட்டியுடன் திரும்பச் செலுத்துமாறு அமெரிக்க அரசு நிர்வாகத்திற்கு வர்த்தக நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இதன்மூலம், 11.91 இலட்சம் கோடி ரூபாய் திருப்பி செலுத்தப்பட உள்ளது. இது ட்ரம்ப் நிர்வாகத்திற்குப் பெரும் பின்னடைவாகும். (ந)




## இரத்தத்திற்கு இரத்த
## கமேனி கொலைக்கு பழிவ
## ஈரான் மதத் தலைவர்கள் உ

(டெஹ்ரான்) ----------------------

**ஈரான் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனியின் கொலைக்குப் பழிவாங்க உத்தரவிட்டு அந்நாட்டு மதத் தலைவர்கள், "பத்வா" எனப்படும் மத உத்தரவு வெளியிட்டிருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.**

அமெரிக்கா - இஸ்ரேல் கூட்டு வான்வழித் தாக்குதலில் மேற்காசிய நாடான ஈரானில் 36 ஆண்டுகளாக உச்ச தலைவராக இருந்த மூத்த மதகுரு அயதுல்லா அலி கமேனி, அவரது குடும்பத்தினருடன் கொல்லப்பட்டார்.

இதற்கு எதிராக ஈரானில் மட்டுமல்ல, பிற நாடுகளிலும் முஸ்லிம்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில், ஈரானின் மிக மூத்த மதகுரு இருவர், கமேனி கொலைக்கு என்ன தண்டனை என்பதை விளக்கி "பத்வா" எனப்படும் முஸ்லிம் சட்ட அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

அதில், 99 வயதான அயதுல்லா நாசர் மகாரெம் ஷிராசி என்ற மதகுரு, அமெரிக்காவையும் இஸ்ரேலையும் முதன்மை குற்றவாளிகள் என குறிப்பிட்டுள்ளார்.

"இந்த குற்றவாளிகளின் தீமையை உலகிலிருந்து அழிக்கும் வரை பழி வாங்குவது உலக முஸ்லிம்களின் மதக் கடமை" என, அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் "ஜிஹாத்" என்ற வார்த்தையைப் பயன்படுத்தி, அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான போராட்டத்தை முஸ்லிம்கள் மேற்கொள்ள வேண்டும் என அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

## கமேனியின் மகனை ஏற்க முடியாது! இறுதி முடிவு என் கையில்!
## ட்ரம்ப் கர்வம்

(வோஷிங்டன்)
ஈரானின் புதிய ஆட்சியாளராக கமேனியின் மகன் மொஜ்தபாவை ஏற்றுக்கொள்ள முடியாது. என்னைக் கேட்டுத்தான் புதிய ஆட்சியாளரைத் தேர்வு செய்ய வேண்டும் என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் தங்கள் நேரத்தை வீணடிக் கிறார்கள். கமேனியின் மகன் இலகுவானவர். வெனிசுலாவில் புதிய ஜனாதிபதி நியமனத்தில் நடந்தது போல, நான் இந்த நியமனத்தில் ஈடுபட வேண்டும். என்னைக் கேட்டுத்தான் புதிய ஆட்சியாளரைத் தேர்வு செய்ய வேண்டும். கமேனியின் மகனை ஏற்றுக் கொள்ள முடியாது. ஈரானுக்கு நல்லிணக்கத்தையும் அமைதியையும் கொண்டு வரக்கூடிய ஒருவரை நாங்கள் விரும்புகிறோம்.



அமெரிக்க இராணுவம், இஸ்ரேல் கூட்டாளிகளுடன் சேர்ந்து, எதிரியைத் திட்டமிட்டதைவிட மிக முன்னதாகவே, மக்கள் இதற்கு முன்பு பார்த்திராத அளவில் தொடர்ந்து அழித்து வருகிறது. ஒவ்வொரு மணி நேரமும் ஈரானின் ஏவுகணைகள் மற்றும் ட்ரோன் திறனை நாங்கள் அதிகமாக அழித்து வருகிறோம். என்ன நடக்கிறது என்று அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களின் கடற்படை பலத்த சேதத்தை சந்தித்துள்ளது.

மூன்று நாட்களில் 24 கப்பல்கள் தாக்கப்பட்டன. அவர்கள் பேச்சுவார்த்தைக்கு அழைக்கிறார்கள் நாம் எப்படி ஒரு ஒப்பந்தம் செய்வது? என்று கேட்கிறார்கள். நான், "நீங்கள் கொஞ்சம் தாமதமாக வருகிறீர்கள்" என்று சொன்னேன்.

ஈரான் புரட்சிகர காவல்படை, இராணுவம் மற்றும் பொலிஸார் தங்கள் ஆயுதங்களைக் கீழே போடுமாறு நான் மீண்டும் ஒருமுறை அழைப்பு விடுக்கிறேன். அவர்கள் கொல்லப்படுவார்கள்.

உலகெங்கிலும் உள்ள ஈரான் இராஜதந்திரிகளை தஞ்சம் கோரவும், புதிய மற்றும் சிறந்த ஈரானை பெரும் ஆற்றலுடன் வடிவமைக்க எங்களுக்கு உதவவும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

அடுத்து ஈரானை யார் வழிநடத்தினாலும், அமெரிக்காவையோ அல்லது அதன் அண்டை நாடுகளையோ அச்சுறுத்தாது என்பதை அமெரிக்கா உறுதி செய்யும் என ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்தார். (ந)

ஈரா
மை



(டெஹ்
ஈரான்
யான க
அந்நாட்டி
கால்பந்
சேதமை
ஊடகங்க
வெளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

தம்!

வாங்க

த்தரவு!



ளிகள்

மையை

ர பழி

ளின்

பிட்டுள்

வார்த்

ரிக்கா

பாராட்

ாள்ள


விடுத்

இதேபோன்று நூரி ஹமதானி என்ற மற்றொரு மதகுரு, குவோம் நகரில் உள்ள செமினரி மாணவர்கள் மற்றும் அறிஞர்கள் சபையின் கோரிக்கைக்கு பதிலளித்து, "புரட்சியின் தியாகத் தலைவரின் இரத்தத்தை சிந்தியவர்களின் இரத்தத்தை சிந்த வைப்பது அனைத்து முஸ்லிம்களின் கடமை" என அறிவித்துள்ளார்.

இந்தப் பத்வாக்கள் வெளியானதும், அமெரிக்க உளவுத்துறை, உலக அளவில் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகரிக்கும் என எச்சரித்துள்ளது.

மேலும் ஐரோப்பா, குறிப்பாக ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் ஈரான் தொடர்புடைய "ஸ்லீப்பர் செல்கள்" குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

## ஈரான் விவகாரத்தில் அமெரிக்காவை விமர்சித்த வீரர்



(வோஷிங்டன்)

இஸ்ரேலின் போரை நாங்கள் நடத்த விருப்பமில்லை என ஈரான் மீதான தாக்குதல்கள் குறித்து அமெரிக்க முன்னாள் கடற்படை வீரர் ஒருவர் பேசும் வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

அமெரிக்க மேலவை துணைக் குழு விசாரணையின்போது, பிரையன் மெக்கின்னிஸ் என்ற அமெரிக்க முன்னாள் கடற்படை வீரர் இஸ்ரேலுக்காகப் போர் புரியத் தங்களுக்கு விருப்பமில்லை என்று கூறி போராட்டத்தில் ஈடுபட்டார். மேலும் "இஸ்ரேலுக்காக, அமெரிக்கா தனது மகன்களையும் மகள்களையும் போருக்கு அனுப்ப விரும்பவில்லை. இஸ்ரேல்தான் இந்தப் போருக்குக் காரணம். அமெரிக்கா இஸ்ரேலுக்காக இந்தப் போரை நடத்த விரும்பவில்லை. பாலஸ்தீனத்தை விடுவியுங்கள். போரை நிறுத்துங்கள்" என முழக்கமிட்டார். இதனால் அங்கிருந்த காவலர்கள் அவர்களை குண்டுக்கட்டாகத் தூக்கி வெளியேற்ற முயன்றனர்.

அப்போது அவர் அங்குள்ள கதவை கெட்டியாக பிடித்துக்கொண்டார். இருப்பினும் பாதுகாப்புப் படையினர் அவரை வெளியே கொண்டு செல்ல வேகமாக இழுத்தனர். இதில் அவர் கை கதவுகளுக்கு இடையில் மாட்டிக்கொண்டது. இதனைத் தொடர்ந்தும் பாதுகாப்பு படையினர் அவரை இழுத்ததால் கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாடுகள் இணைந்து ஈரான் மீது மேற்கொண்டுவரும் போர் நடவடிக்கையே இந்தச் சம்பவத்திற்கு முக்கிய காரணமாகும். (நி)

## சரணடையுங்கள்; இல்லையேல் மரணம் உறுதி ட்ரம்ப் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஈரானியப் புரட்சிகர காவல்படை, இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பகிரங்கமானதும் இறுதியானதுமான எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஈரானியப் படையினர் உடனடியாகத் தமது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, கிளர்ச்சியில் ஈடுபடும் மக்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளை மாளிகையிலிருந்து விசேட உரையொன்றை நிகழ்த்திய ஜனாதிபதி ட்ரம்ப், ஈரானியப் படைகளுக்கு இரண்டு தெரிவுகளை வழங்கியுள்ளார்.

"ஈரானியப் புரட்சிகர காவல்படை மற்றும் பொலிஸார் உடனடியாகத் தமது ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என நான் மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் எமது பக்கம் நின்றால், உங்களுக்கு முழுமையான பாதுகாப்பு மற்றும் [illegible] வழங்கப்படும்."

"நீங்கள் தொடர்ந்து போராடினால் கொல்லப்படுவது உறுதி. உங்களது மரணம் நிச்சயமாக உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. நான் அதனைப் பார்க்க விரும்பவில்லை. எனவே, உங்கள் நாட்டை மீண்டும் மீட்டெடுக்க இதுவே சரியான தருணம்."

இதேவேளை, உலகம் முழுவதும் உள்ள ஈரானிய இராஜதந்திரிகள் தமது பதவிகளைத் துறந்துவிட்டு, அரசியல் தஞ்சம் கோருமாறு ட்ரம்ப் அழைப்பு விடுத்துள்ளார்.

"சிறந்த எதிர்காலம் மற்றும் பாரிய ஆற்றல் கொண்ட ஒரு புதிய ஈரானை உருவாக்குவதற்கு எமக்கு உதவுங்கள். ஈரானிய இராஜதந்திரிகள் எமது பக்கத்தில் இணைந்து இந்த மாற்றத்திற்கு வலு சேர்க்க வேண்டும்" என அவர் மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் ஈரானின் முக்கிய இராணுவ நிலைகள் மீது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ள நிலையில், ஜனாதிபதி ட்ரம்பின் இந்த அறிவிப்பு ஈரானியப் படைகளுக்குள்ளேயே பிளவுகளை ஏற்படுத்தக்கூடும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

ஈரானியத் தலைநகர் டெஹ்ரானை நோக்கி அமெரிக்க ஆதரவுப் படைகள் முன்னேறி வருவதாகக் கூறப்படும் நிலையில், இந்த "சரணடைதல் அல்லது மரணம்" என்ற எச்சரிக்கை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (நி)



## ஈரானின் கால்பந்து மைதானம் கடும் சேதம்



(டெஹ்ரான்)

ஈரான் மீது நடத்தப்பட்ட தொடர்ச்சியான கடுமையான தாக்குதல்களால், அந்நாட்டின் புகழ்பெற்ற அசாதி சர்வதேச கால்பந்து மைதானம் முழுமையாக சேதமடைந்துள்ளதாக ஈரானிய அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

வெளிநாட்டு ஊடகங்களின் செய்திகளின்படி, பல ஆண்டுகளாக சர்வதேச கால்பந்து போட்டிகள் மற்றும் பல்வேறு விளையாட்டு நிகழ்வுகளின் முக்கிய மையமாக விளங்கிய இந்த மைதானம், தாக்குதலுக்கு உள்ளானதில் அதன் பெரும்பகுதி தீக்கிரையாகியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஈரானிய ஊடகங்கள் வெளியிட்டுள்ள காணொளி காட்சிகளின்படி, மைதானத்தின் பார்வையாளர் அரங்கம் மற்றும் கட்டடத் தொகுதிக்கு கடும் சேதம் ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால்
# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் துறைசார் வளவாளர், பயிற்சி நெறியாளர், கட்டுரையாளர், ஆய்வியலாளர் மற்றும் நடுவர்களுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், நாடளாவிய ரீதியில் இந்து சமய, தமிழ் மற்றும் கலைத் துறைசார் வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது.

இந்து சமய அறநெறிப் பாடசாலைச் சமூகத்திற்கு ஆக்கத்திறன் ஆளுமைகளை வளர்ப்பதற்கான பேச்சாற்றல், எழுத்தாற்றல், கதாப் பிரசங்கம், புராணபடனம், வில்லிசை, நாடகம், சொல்லாடல், பண்ணிசை, நடனம், யோகாசனம் முதலான ப்யிற்சிகளை வழங்கும் வளவாளர்களையும் அறநெறி மாணவர்களுக்கான ஆக்கத்திறன் ஆளுமை வெளிக்கொணர்வுப் போட்டிகளின் போது நடுவர்களாகப் பங்கேற்பதற்காகவும் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக் களத்தால் முன்னெடுக்கப்படுகின்ற கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், பயிலரங்குகள், வதிவிடப் பயிற்சிகள், தலைமைத்துவப் பயிற்சி வழிகாட்டல்கள் முதலான அம்சங்களுக்காகத் துறைசார் வல்லுநர்களிடமிருந்தும் விண்ணப்பங்களை எதிர்பார்க்கிறது.

விண்ணப்பிக்க விரும்புவோர், தமது சுயவிபரக் கோவையினை "Department of Hindu Religious and Cultural Affairs, 4th Floor, 180, T.B.Jaya Mawatha, Colombo 10" முகவரிக்குப் பதிவுத் தபாலிலும் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "துறைசார் வளவாளர் - விண்ணப்பம் கோரல் - 2026" எனக் குறிப்பிட்டு, 31.03.2026 ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்க வேண்டும் என அறிவித்துள்ளனர். (3)


# கல்யாணமாலை
## சர்வ்தேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983- இந்து
நட்சத்திரம்:திருவோணம்
12இல்செவ்
உயரம்:5'5"
தகைமை/தொழில்-QS, Business
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16499

பிறப்பு:1992- RC
நட்சத்திரம்: சுவாதி
12இல்செவ்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSc,Developer(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16027

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்-திருவாதிரை
7இல்செவ்
கி-பா: 16
உயரம்:5'7"
தகைமை/தொழில்:BBM, Director(pvt)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16535

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி-பா: 24
3இல்சூரிசெவ்
உயரம்:6"
தகைமை/தொழில்: A/L, Driver(Gov)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16540

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்:- அத்தம்
கி-பா: 46 1/2
உயரம்:5'8"
தகைமை/தொழில்: Degree, Project Manager
எதிர்பார்ப்பு: Only Canada
தொ.இ: B/16544

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1978-இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி-பா: 50
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BSc, MSc,Data Analyst
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண், விவாகரத்தானவர்
தொ.இ: G/16547

பிறப்பு:1989-இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
2இல்செவ்
கி-பா: 37
உயரம்: 5"
தகைமை/தொழில்: Diploma, Supervisor
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: G/16551

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்:பூரம்
2இல்செவ்
கி-பா:39 1/2
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BSc, PHD, Engineer (Australia)
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/16552

பிறப்பு:1987-இந்து
நட்சத்திரம்:திருவாதிரை
கி.பா: 43 3/4
உயரம்:5'6"
தகைமை/தொழில்: BE, Engineer (Newzealand)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: G/14826

பிறப்பு:1985 - இந்து
நட்சத்திரம்:பூரட்டாதி
உயரம்: 5'
தகைமை/தொழில்: BCom, Auditor
எதிர்பார்ப்பு : சைவபோசனம்
தொ.இ: G/15361

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 549



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# வலிப்பு நோய்

ஒரு சமயம் ஒரு ஊருக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு ஆள் மல்லாக்க விழுந்து கிடந்தான். எல்லோரும் சேர்ந்து அங்கே புகையை உண்டாக்கிக் கொண்டிருந்தார்கள். என்ன விடயம் என்று விசாரித்தேன்.

அந்த ஆளுக்கு வலிப்பு வந்துவிட்டதாம். அவர் மூக்கிலே புகையை ஏத்தப்போகிறார்களாம். அது எல்லாம் வேண்டாம் என்று சொல்லி அவர்களை டாக்டரிடம் அனுப்பி வைப்பதற்குள்ளே போதும் போதும் என்று ஆகிவிட்டது. வலிப்புக்கு நம் ஆட்கள் செய்கின்ற வைத்தியம் என்ன தெரியுமா? அந்த ஆளை கட்டையாலே அடிக்கிறது! இலையாலே அடிக்கிறது! சூடு போடுவது! கையிலே இரும்பு சாவியைக் கொடுக்கிறது! மூக்குலே புகை ஏற்றுவது! இது எல்லாம்தான்! மூட நம்பிக்கைகள்.

வலிப்பு நோயை குணப்படுத்துவதற்கு நல்ல மருந்து எல்லாம் இருக்கு. தொடர்ந்து கொஞ்ச காலத்திற்கு (3 முதல் 5 வருடம்) தவறாமல் சாப்பிட்டால் சௌகரியமாகிவிடும்! அதை விட்டுவிட்டு மூக்கிலே புகை ஏற்றுவது எல்லாம் மகாக் கொடுமை. வலிப்பு நோய் என்று பேச்சுக்குச் சொல்றோமே தவிர, முதலிலே இது ஒரு வியாதியே அல்ல. அதை முதலிலே புரிந்து கொள்ள வேண்டும். காய்ச்சல், இருமல் மாதிரி இதுவும் ஒரு நோயின் அறிகுறிதான்!

சரி - இந்த வலிப்பு எதனாலே வருகிறது? அதற்கு என்ன காரணம்?

மூளையிலே 2 மில்லியன் நரம்பு செல்கள் இருக்கு. வேதியல் மாற்றங்களாலே அது எல்லாம் வேலை செய்கிறது!

இந்த வேதியல் மாற்றத்தினாலே மின் சக்தி உண்டாகிறது. இதனாலே ஒரு செல்லுக்கும் இன்னொரு செல்லுக்கும் தொடர்பு ஏற்படுகிறது.

இந்த மின் உற்பத்தி அதிகமாகி மின் அலையாதி மின் புயலாக ஆகும் போது வலிப்பு வந்துவிடும்! அவ்வளவுதான் காரணங்கள் இருக்கு. இதிலே பல இது ஏற்படுவதற்குப் பல வகையும் உண்டு.

பெரு வலிப்பு (Grandmal) என்று ஒன்று. இது வந்துவிட்டது என்றால் ஒருவர் திடீர் என்று கத்திக்கொண்டு நினைவு இழந்து தரையிலே விழுவார். சில வினாடிகளுக்கு மூச்சு கூட நின்றுவிடும். கை, கால் வெட்டி வெட்டி இழுக்கும். வாயிலே நுரை வரும்! நாக்கை கடித்துக் கொள்வார்கள்! வாயிலேயிருந்து இரத்தம் கலந்த உமிழ்நீர் வெளியே வரும்.

அதன் பின்பு இந்த கை, கால் ஆட்டம் எல்லாம் நின்றுவிடும்! பிறகு நினைவு இழந்துவிடுவார்கள். கொஞ்சம் கொஞ்சமாக நினைவு திரும்பும். சிலபேர் அப்படியே தூங்கிக் கூட போய் விடுவார்கள்!

சிறு வலிப்பு (Petitmal) என்று ஒன்று. 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு மட்டும் இதுவரும். சில வினாடி நினைவு இழந்து விடுவார்கள். கீழே விழ மாட்டார்கள்! மயாக்யோனிக் ஜெர்க் (Myoclonic Jerk) என்று ஒன்று. திடீர் என்று கை, கால் வெட்டி இழுக்கும். கையிலே உள்ள பொருள் தவறி விழலாம். இது எல்லாம் பொதுவான வலிப்பு.

ஒரு பக்க வலிப்பு (Partial Seizure) என்பது எப்படி என்றால் முகம் ஒரு பக்கம் கோணிக்கொண்டு போகலாம். கை அல்லது கால் வெட்டி வெட்டி இழுக்கலாம். ஒரு பாகத்திலேயிருந்து ஆரம்பித்து மற்ற பாகங்களுக்குப் பரவும். நினைவிழக்கவும் வாய்ப்பு உண்டு.

சில பேருக்கு கரண்ட் ஷாக் மாதிரி இருக்கும். சில பேருக்கு கண்ணிலே மாயத் தோற்றங்கள்கூட தெரியும். எதிரிலே ஏதாவது காட்சியோ பொருளோ தெரியும். அசையாத பொருள் எல்லாம் அசைவது மாதிரி தெரியும். பெரிய பொருள் சின்னதாகவும், சிறிய பொருள் பெரிதாகவும் தெரியும். வெளி உலகத்திலே சஞ்சரிக்கிறது மாதிரிக்கூட தெரியும். காதிலே விநோத ஒலிகள் கேட்கலாம். தான் என்ன செய்கிறோம் என்பது இவர்களுக்குத் தெரியாது.

வலிப்பு என்பது இன்றைக்கு நேற்று ஏற்பட்டது என்றா நினைக்கிறீர்கள்? அப்படி இல்லை! மனிதகுலம் உண்டான காலத்திலே இருந்து இதுவும் இருந்திருக்கு. சித்தர்களே இதைப் பற்றி எழுதியிருக்கிறார்களாம். அவர்கள் வலிப்பை 21 வகையாக பிரித்திருக்கிறார்களாம். ஒவ்வொரு வகைக்கும் ஒரு பறவை அல்லது மிருகத்தின் பேரை வைத்திருக்கிறார்களாம். பெரு வலிப்புக்கு அவர்கள் வைத்த பெயர் காக்கா வலிப்பு! வெந்நீரிலே குளித்தப் பிறகு பிதற்றிக்கொண்டு வலிப்பு வந்தால் அது முயல் வலிப்பாம்! இப்படி பல பெயர்! இப்படி எல்லாம் அவர்கள் இருந்தார்கள் என்றால் இன்னமும் புதுப் புதுப் பெயர் எல்லாம் வைக்க வேண்டியிருக்கும்.

தமக்கு வேண்டிய ஒருவர் அப்படித்தான் அடிக்கடி பொத்து பொத்து என்று கீழே விழுவார். கையை, காலை உதைத்துக் கொள்வார். வாங்க டாக்டரிடம் போகலாம் என்றால் வரமாட்டார்.

"அங்கே போய் தீரக்கூடிய வலிப்பு இல்லை இது! இது ஒரு தனி ரகம்!" என்றார்.

"அது எப்படி?" என்று கேட்டேன்.

"வீட்டிலே பீரோ சாவி எனக்கு வேண்டும் என்று நினைக்கிறப்போதெல்லாம் அப்படி கீழே விழுந்து உதைத்துக் கொள்வேன்.

உடனே, வலிப்பு என்று நினைத்து அந்த சாவியை கையிலே கொண்டு வந்து கொடுத்து விடுவார்கள்! சாவி என் கைக்கு வருவதற்கு இதைவிட வேறு வழி எதுவும் எனக்குத் தெரியவில்லை!" என்றார் ரொம்பப் பரிதாபமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் விபத்துக்குள்ளான படகு;

## காரணத்தை அறிய அமைச்சர் பணிப்பு!

**(யாழ்ப்பாணம்)**

**யாழில் படகு விபத்துக்கான முழுமையான காரணங்களைக் கண்டறிவதற்குரிய அவசர விசாரணை முன்னெடுக்குமாறு கடற்படையினரும், சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.**



கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரால் இது தொடர்பான அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

படகு விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு அமைச்சர் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

துயரத்தில் இருக்கும் குடும்பங்களுக்கு அரசாங்கம் சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

விபத்துக்குள்ளான படகு பயணத்திற்கு பாதுகாப்பான நிலையில் இருந்ததா, பயணிகளின் எண்ணிக்கை விதிமுறைகளுக்கு உட்பட்டதா, கடல் பயணத்திற்கான பாதுகாப்பு நடைமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டனவா என்பன குறித்து விரிவாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடமும், பொலிஸார் மற்றும் கடற்படையினருடன் அமைச்சர் அவசர கலந்துரையாடலையும் மேற்கொண்டுள்ளார்.

அதேவேளை, பாதிக்கப்பட்ட மக்கள் அனுமதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலை அதிகாரிகளுடனும் அமைச்சர் தொடர்பு கொண்டு அவர்களின் உடல் நிலை குறித்து கேட்டறிந்துள்ளார். (3)

# 'கலைஞனின் குரல்' இதழ் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் கலைஞனின் குரல் மாதாந்த பத்திரிகை இதழ்-8 வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு பாஷையூர் சென். அன்ரனிஸ் றோ.க.மகளீர் பாடசாலையில் கலைஞனின் குரல் ஆசிரியர் இரா.மதிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 300 | 300 | 250 | 180 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 160 | 240 | 190 | 320 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 400 | 280 | 325 |
| தக்காளி | 100 | 80 | 100 | 150 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 200 | 200 | 180 | 100 |
| கோவா | 120 | 80 | 200 | 200 | 120 | 140 |
| கரட் | 250 | 430 | 400 | 400 | 350 | 320 |
| பூசணி | 120 | 140 | 150 | 150 | 100 | 80 |
| புடோல் | 150 | 150 | 100 | 200 | 150 | 130 |
| வாழைக்காய் | 180 | 180 | 200 | 200 | 140 | 120 |
| சின்ன வெங்காயம் | 250 | 320 | 300 | 300 | 180 | 240 |
| பெரிய வெங்காயம் | 180 | 200 | 180 | 200 | 160 | -- |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 400 | 400 | 350 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 300 | 400 | -- | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 400 | 450 | 350 | 250 |
| லீக்ஸ் | 250 | 260 | 300 | 300 | 300 | 250 |
| பீற்றூட் | 100 | 100 | 200 | 150 | 150 | 130 |
| கறிமிளகாய் | 400 | 250 | 400 | 300 | 250 | 350 |
| முருங்கைக்காய் | -- | -- | 2000 | 3000 | -- | -- |
| போஞ்சி | 250 | 250 | 400 | 400 | 300 | 330 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | 250 | 250 | -- | -- |
| கீரை - 1 பிடி | 120 | 80-140 | 150 | 120 | -- | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 100 | 200 | 150 | 70 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 80 | 100-150 | -- | 120 |
| இராசவள்ளி | 350 | 550 | 400 | 400 | -- | 350 |
| வெங்காயப்பூ | 120 | 100 | 200 | 200 | -- | -- |
| முள்ளங்கி | 100 | 160 | 150 | 200 | 150 | 60 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 60 | -- | 50 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | -- | 70 |
| ஈரப்பலா | 150 | 200 | 100 | 120 | -- | 100 |

# இராசிபலன்

07.03.2026
மாசி 23, சனிக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 8.04 மணிவரை

சித்திரை முற்பகல் 11.59 மணிவரை
சுப நேரம் 3.25-4.55 மணிவரை
இராகுகாலம் 9.25-10.55 மணிவரை

சந்திராஷ்டமம்:
பூரட்டாதி, உத்தரட்டாதி

வளவன்



மேஷம்

நண்பர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காரிய அனுகூலமுண்டு.



கடகம்

இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.



துலாம்

பயணங்களால் பலனுண்டு, சுப விரயங்கள் மோலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.



மகரம்

சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், போசன சுகமுண்டு.



ரிஷபம்

குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல் ஒழுங்காகும், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.



சிம்மம்

சிந்திக்காமல் செய்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், செல்வாக்கு மேலோங்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



விருச்சிகம்

பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.



கும்பம்

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.



மிதுனம்

பிரியமானவர்கள் மனம் விட்டுப் பேசுவார்கள், நன்மைகள் நாடி வரும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள்.



கன்னி

சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், சுய முயற்சிகள் மூலம் சுகம் காண வேண்டிய நாள், வாக்கு மேன்மையுண்டு, செயற்பாடுகளில் தீவிரம் கூடும்.



தனுசு

மதிப்பும் மரியாதையும் உயரும், நினைத்தது நிறைவேறும் வாய்ப்புண்டு, தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம்.



மீனம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வேலைச் சுமை அதிகரிக்கும், காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.

**பிறப்பால் அனைவரும் ஒன்று ஆனால் ஒழுக்கத்தால் உயர்கின்றோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 993





ஆயினும், தமது ஆர்வத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு தமக்கையாரிடமிருந்து செய்தி வந்த பின்னர்தான் தஞ்சைக்குப் புறப்பட வேண்டுமென்று உறுதியாக இருந்தார். பொழுது போவது என்னமோ மிகவும் கஷ்டமாக இருந்தது.

புத்த பிக்குகள் தினந்தோறும் நடத்திய ஆராதனைகளிலும், பூஜைகளிலும் கலந்துகொண்டு சிறிது நேரத்தைப் போக்கினார்.

சூடாமணி விஹாரத்தின் சுவர்களிலே தீட்டப்பட்டிருந்த அருமையான சித்திரக் காட்சிகளைப் பார்ப்பதில் சிறிது நேரம் சென்றது. பிக்குகளுடன், முக்கியமாகச் சூடாமணி விஹாரத்தின் ஆச்சாரிய பிக்குவுடன் சம்பாஷிப்பதிலே கழிந்த பொழுது அவருக்கு உற்சாகத்தை அளித்தது. ஏனெனில் சூடாமணி விஹாரத்தின் தலைமைப் பிக்கு கீழ்த்திசைக் கடலுக்கு அப்பாலுள்ள பற்பல நாடுகளிலே வெகுகாலம் யாத்திரை செய்தவர்.

சீன தேசத்திலிருந்து சாவகத்தீவு வரையில் பல ஊர்களுக்கும் சென்று வந்தவர். அந்தந்த நாடுகளைப் பற்றியும் அவற்றிலுள்ள நகரங்களைப் பற்றியும் ஆங்காங்கு வசித்த மக்களைப் பற்றியும் அவர் நன்கு எடுத்துக்கூற வல்லவராயிருந்தார்.

சீன தேசத்துக்குத் தெற்கே கடல் சூழ்ந்த பல நாடுகள் அந்நாளில் ஸ்ரீ விஜயம் என்னும் சாம்ராஜ்யத்தில் அடங்கியிருந்தன. அருமண நாடு, காம்போஜ தேசம், மானக்கவாரம், தலைத்தக்கோலம், மாபப்பாளம், மாயிருடிங்கம், இலங்கா சோகம், தாமரலிங்கம், இலாமுரி தேசம் முதலிய பல நாடுகளும் நகரங்களும் ஸ்ரீ விஜய சாம்ராஜ்யத்துக்கு உட்பட்டோ, நேசப் பான்மையுடனோ இருந்து வந்தன.

இவற்றுக்கெல்லாம் நடு நாயகமாகக் கடாரம் என்னும் மாநகரம் இணையற்ற சீர் சிறப்புகளுடனும் செல்வ வளத்துடனும் விளங்கி வந்தது.

அந்த நாடு நகரங்களைப் பற்றி விபரிக்கும்படி ஆச்சாரிய பிக்குவுக்கு ஓய்வு கிடைத்த போதெல்லாம் பொன்னியின் செல்வர் அவரைக் கேட்டு வந்தார். அவரும் அலுப்புச் சலிப்பில்லாமல் சொல்லி வந்தார்.

அந்நாடுகளில் உள்ள இயற்கை வளங்களைப் பற்றியும் வர்த்தகப் பெருக்கத்தைப் பற்றியும் கூறினார். பொன்னும் மணியும் கொழித்துச் செந்நெல்லும் கரும்பும் செழித்துச் சோழவள நாட்டுடன் எல்லா வகையிலும் போட்டியிடக் கூடிய சிறப்புக்களுடன் அந்நாடுகள் விளங்குவதைப் பற்றிக் கூறினார். பழைய காலத்திலிருந்து தமிழகத்துக்கும், அந்த நாடுகளுக்கும் உள்ள தொடர்புகளைப் பற்றிக் கூறினார்.

பல்லவ நாட்டுச் சிற்பிகள் அந்த தேசங்களுக்குச் சென்று எடுப்பித்திருக்கும் அற்புத சிற்பத்திறமை வாய்ந்த ஆலயங்களைப் பற்றிச் சொன்னார்.

தமிழகத்திலிருந்து சென்ற சித்திர, சங்கீத, நாட்டியக் கலைகள் அந்நாடுகளில் பரவியிருப்பதைப் பற்றியும் கூறினார். இராமாயணம், மகாபாரதம், முதலிய இதிகாசங்களும், விநாயகர், சுப்ரமணியர், சிவன், பார்வதி, திருமால் ஆகிய தெய்வங்களும், புத்த தர்மமும் அந்த தேசத்து மக்களின் உள்ளங்களில் கலந்து குடிகொண்டிருப்பதையும், ஒன்றோடொன்று பிரித்து உணர முடியாதவர்களாக அந்நாட்டு மக்கள் எல்லாத் தெய்வங்களையும் வணங்கி வருவதையும் எடுத்துச் சொன்னார்.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## நாட்டின் விலை



ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அவன் மிகவும் தற்பெருமை கொண்டவனாக இருந்தான். அரசனும் அவன் நண்பனும் காட்டில் வேட்டையாடுவதற்காக ஒருநாள் சென்றனர். அங்கும் இங்கும் அலைந்து திரிந்ததால் அரசனுக்கு நீர் வேட்கை உண்டாயிற்று. நண்பனைப் பார்த்து, "எங்கேனும் சென்று குடிப்பதற்கு நீர் கொண்டு வா" என்றான். தண்ணீர் தேடிச் சென்ற நண்பன் வேண்டுமென்றே காலந்தாழ்த்தி நீருடன் வந்தான். "விரைவில் தண்ணீர் கொடு. நான் குடிக்க வேண்டும்" என்றான் அரசன்.

அதற்கு அந்த நண்பன், "அரசே! சற்றுப் பொறுங்கள். நீங்கள் மிகவும் பெருமைக்கு உரியவர். இப்பொழுது தாகத்தால் துடித்துக் கொண்டிருக்கிறீர், இச்சூழலில் இந்தத் தண்ணீருக்கு விலையாக என்ன தருவீர்?" என்று கேட்டான்.

உடனே அரசன், "இதற்கு விலையாக என் நாட்டில் பாதியைத் தருவேன்" என்று பெருமையுடன் சொல்லியபடி அந்நீரை வாங்கிக் குடித்தான். அப்பொழுது அந்த நண்பன், "தங்கள் தகுதிக்கு உரியதைச் சொன்னீர்கள். இப்பொழுது நீங்கள் குடித்த இந்நீர் உடலைவிட்டுச் சிறுநீராக வெளிவரவில்லை என்று கொள்வோம். அதுவும் துன்பம் தரும்.

அந்த நீர் வெளி வந்து உடல் நலம் பெறத் தாங்கள் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டான். இதற்கும் "என் நாட்டில் மறுபாதியை விலையாகத் தருவேன்" என்றான் அரசன்.

இதைக் கேட்ட நண்பன், "ஒரு கோப்பைத் தண்ணீர் குடிப்பதற்கும். அதே ஒரு கோப்பை நீர் வெளியேறுவதற்கும் உங்கள் நாட்டையே தருவதாக ஒப்புக் கொண்டுள்ளீர்.

அப்படியானால் உங்கள் நாட்டின் மதிப்பு ஒரு கோப்பை நீரின் மதிப்புதானே. இந்நாட்டை ஆள்வதற்காகவா இவ்வளவு பெருமை கொண்டுள்ளீர்?" என்று வினவினான்.

நாட்டின் அரசன் இதைக் கேட்டுத் தலை கவிழ்ந்தான். அவன் தற்பெருமை அன்றோடு ஒழிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதார பிறருக்குச் செய்யும் உதவி பல மடங்கு பலனாக வந்து சேரும். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஜனாதிபதி அநுர எடுத்த மனிதாபிமான முடிவு

இலங்கையிடம் தஞ்சம் கோரிய ஈரானிய கப்பலுக்கும் அதில் பயணித்த 208 பேருக்கும் அடைக்கலம் கொடுப்பதென ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எடுத்த முடிவு மனிதாபிமானத்தின் பாற்பட்டது.

தவிர, கப்பலில் இருக்கக்கூடிய 208 பேரையும் இலங்கையில் தங்கவைப்பதற்கான முடிவுகளை இலங்கை அரசு எடுப்பதற்கு முன்னதாக; ஐக்கிய நாடுகள் சபையுடன் இலங்கை அரசு கலந்துரையாடியதையடுத்து மேற்போந்த முடிவை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எடுத்துள்ளார்.

உண்மையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எடுத்த முடிவு விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட மனிதாபிமான செயற்பாடாகும்.

உண்மையில் மேற்படி கப்பலுக்கும் கப்பலில் வந்தவர்களுக்கும் அடைக்கலம் கொடுப்பதற்கு இலங்கை மறுத்திருக்குமாயின் – பிரஸ்தாபக் கப்பல் மீது அமெரிக்கா அல்லது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி அந்தக் கப்பல் முற்றாக அழிந்து கப்பலில் இருந்தவர்கள் உயிரிழக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டிருக்குமாயின்,

அடைக்கலம் கோரிய ஈரானியர்களை இலங்கை காப்பாற்றத் தவறியது என்ற குற்றச்சாட்டு, இந்த உலகம் இயங்கும்வரை இருக்கவே செய்யும்.

ஆம், நாடு சிறியதாக இருக்கலாம். அந்த நாட்டின் பொருளாதாரம் பலமற்றதாக இருக்கலாம். ஏன்? நாட்டின் பாதுகாப்புக்கூட மிகவும் பலவீனப்பட்டதாகக் காணப்படலாம்.

ஆனால் இவை அனைத்தையும் கடந்து, எதுவரினும் மனிதாபிமான உதவியைச் செய்வதற்கு ஒருபோதும் பின்னிற்கக் கூடாது என்ற அடிப்படையில், ஈரானியக் கப்பலை திருகோணமலைத் துறைமுகத்தில் தரிக்க வைப்பதற்கும் அந்தக் கப்பலில் இருந்த 208 பேரை வெலிசறையில் உள்ள படை முகாமில் தங்கவைப்பதற்குமான ஏற்பாட்டை இலங்கை அரசு செய்துள்ளது.

இது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க எடுத்த மிகத் தரமான – தெளிவான முடிவாகும்.

ஆம், இலங்கையின் ஜனாதிபதியாக வேறு யார் இருந்தாலும் இவ்வாறு மனிதாபிமானத்துக்கான துணிச்சல்மிகு தீர்மானத்தை எடுத்திருப்பார்களா? என்பது ஐயத்திற்குரியதே.

உண்மை. அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து ஈரானுக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பித்ததைத் தொடர்ந்து மத்திய கிழக்கு முழுமையும் யுத்த பூமியாக மாறியுள்ளது.

நிலைமை இவ்வாறாக இருக்கையில், எவரும் எதிர்பாராத வகையில் ஈரானியக் கப்பல் இலங்கைக்கு அண்மித்த கடற்பரப்பில் மரண பயத்துடன் தரித்து நின்றவாறு; எங்களுக்கு உதவுங்கள் என கோரிக்கை விடுத்தனர். அந்தக் கோரிக்கையை ஏற்று அவர்களுக்கு இலங்கை அடைக்கலம் வழங்கியதை எவரும் முரண்பாட்டுச் சிந்தனையில் பார்க்கக் கூடாது – பார்க்கவும் மாட்டார்கள்.

# அரசியல் காரணங்களுக்காக இனி சமாதான நீதிவான் பதவி இல்லை

## வயது எல்லை 75 ஆக மாற்றத் தீர்மானம்
## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார

(கொழும்பு)

சமாதான நீதிவான் பதவி இனி அரசியல் காரணங்களுக்காக வழங்கப்படமாட்டாது.

மேலும் வயது எல்லையை 75 ஆக மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

நேற்று (06) பாராளுமன்றில் உரையாற்றிய அமைச்சர், ஒரு சமாதான நீதிவான் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு தற்போது முறையான வழிமுறை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

அதேபோல்நாடு முழுவதிலுமுள்ள சமாதான நீதிவான்களின் தகவல்கள் அடங்கிய தரவுத்தளம் ஒன்று தயாரிக்கப்பட்டுவருவதாகவும்இதன் மூலம்ஒரு பிரதியை அத்தாட்சிப்படுத்தும் நபர் உண்மையான சமாதான நீதிவான் தானா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என்றும் அவர் கூறினார்.

இனிவரும் காலங்களில் இப்பதவிக்கான நியமனங்களை வழங்கும் போது அதிகபட்ச வயது எல்லை 75 வயது வரை மட்டுமே அமையும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இனி இந்தப் பதவி அரசியல் ரீதியாக வழங்கப்படமாட்டாது. அதே போல், ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை சுய விபரக் கோவையைப் புதுப்பிப்பதற்கான புதிய முறையை நாம் உருவாக்கியுள்ளோம்.

கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலகம் ஊடாக இதனை உறுதிப்படுத்தும் நடைமுறை பின்பற்றப்படும்.

தவறிழைக்கும் சமாதான நீதிவான்களுக்கு எதிராக முறைப்பாடு செய்ய வட்ஸ்அப் இலக்கம், மின்னஞ்சல் மற்றும் தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை நாம் தயார் செய்துள்ளோம்.

முன்னர் நியமிக்கப்பட்டவர்களின் பதவிகளை உடனடியாக இரத்துச் செய்வது குறித்து இன்னும் தீர்மானிக்கவில்லை.

சிலர் 5-10 வருடங்களாக அனுபவம் பெற்றுள்ளனர். ஆனால், மிக விரைவில் தரவுத்தளம் ஒன்றை உருவாக்கும் பணியை முன்னெடுப்போம். அப்போது, எங்கு முத்திரை இடப்பட்டாலும் அவர் தகுதியுள்ள சமாதான நீதிவான் தானா என்பதை எம்மால் அறிய முடியும் என்றார். (ம-7)

## எரிபொருள் வரிசைக்குத் தீர்வு காண
## யாழ்.இந்து மாணவனால் செயலி உருவாக்கம்

எரிபொருள் வரிசைக்குத் தீர்வு காண யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மாணவனால்புதிய செயலி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இச்செயலி தொடர்பான விளக்கம் நேற்று ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் நிலவிய எரிபொருள் விநியோகச் சவால்களுக்குத் தொழில்நுட்ப ரீதியான தீர்வுகாண்பது தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநரால் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிபர் இ.செந்தில்மாறனிடம் விசேட கோரிக்கையொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. இந்தக் கோரிக்கைக்கு அமைவாக, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் மாணவனான ரமேஷநாதன் கருவூலன் இந்தத் தொழில்நுட்பச் செயலியை வெற்றிகரமாக உருவாக்கியுள்ளார்.

இதன் மூலம்

1. பயனாளிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட எரிபொருள் அளவு மற்றும் பெற்றுக்கொள்ளக் கூடிய எரிபொருள், இதுவரை பெற்றுக்கொண்ட எரிபொருட்களின் விபரத்தினை அளவு எரிபொருள் நிரப்பு நிலையம் என்ற வகையில் அறிந்து கொள்ள முடியும்.

2. மக்கள் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் இருப்பினை வெளிப்படையாக அறிந்து கொள்ள முடியும்.

3. இலகுவாக இச்செயலியில் பதிவேற்றத்தினைப் பெற்றோல் நிரப்பு நிலைய அலுவலர் அல்லது நியமிக்கப்பட்ட அலுவலர் மேற்கொள்ள முடியும்.

4. பயனாளர்களுக்கான எரிபொருள் ஒதுக்கீட்டினை வாகன வகை, எரிபொருள் இருப்பு என்பதற்கமைய பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மாற்றியமைக்க முடியும்.

5. QR முறையினைப் பயன்படுத்த முடியும்

நேற்றைய கலந்துரையாடலின்போது, இப்புதிய செயலியின் தொழிற்பாடு மற்றும் பயன்பாடுகள் தொடர்பிலான விரிவான முன்னளிக்கையை குறித்த மாணவன் ஆளுநர் உள்ளிட்ட அதிகாரிகளுக்குச் செய்துகாட்டினார்.

இதனைத் தொடர்ந்து, இச்செயலியைப் பொதுமக்கள் பாவனைக்கு ஏற்றவாறு மேலும் எவ்வாறு மேம்படுத்துவது என்பது தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இனிவரும் காலங்களில், ஏதாவது ஒரு சில பிரதேசங்களில் மாத்திரம் எரிபொருளுக்கான வரிசை நிலைமை ஏற்படும் சந்தர்ப்பங்களில், எரிபொருள் விநியோகத்தை மிகவும் நேர்த்தியாகவும் மக்கள் எவ்வித சிரமங்களுமின்றியும் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக இந்தச் செயலியைப் பயன்படுத்த முடியும் என இதன் போது தெரிவிக்கப்பட்டது. (ம-7)

## போதைப்பொருளுடன்
## கட்டுநாயக்கவில் ஒருவர் கைது

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சுமார் 11 கிலோகிராம் குஷ் மற்றும் ஹஷீஸ் போதைப் பொருட்களுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

விமான நிலைய வருகை முனையத்தில், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது சந்தேக நபரிடமிருந்து 6 கிலோகிராம் 590 கிராம் குஷ் ரகப் போதைப்பொருள் மற்றும் 4 கிலோகிராம் 910 கிராம் ஹஷீஸ் ரக போதைப்பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. (ம-7)

## புத்தளத்தில் கோரவிபத்து; இரு மாணவர்கள் பலி

புத்தளம் கடயமோட்டைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள் னர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (05) பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மாணவர்கள் வீதியில் சென்று கொண்டிருந்த போது லொறி ஒன்று மோதியதால் இந்தச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலேயே மாணவன் ஒருவர் உயிரிழந்த நிலையில் பிறிதொரு மாணவன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கில் நிலவும் போர்ப்பதற்றம்; இலங்கையின் பொருளாதாரத்திற்கு அச்சுறுத்தல்

## பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை



(கொழும்பு)

**மத்திய கிழக்கில் நிலவும் போர்ப்பதற்றம் உலகப் பொருளாதாரத்தில் கடுமையான நெருக்கடிக்கு வழிவகுக்கும் எனவும் இது இலங்கை போன்ற நாடுகளின் பொருளாதாரங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.**

இது குறித்து ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ ஆய்வுகள் பீடத்தின் பேராசிரியர் பிரகீத் வீரதுங்க பல்வேறு தகவல்களை வெளியிட்டுள்ளார்.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் உலகப் பொருளாதாரத்தைப் பாதிப்பதோடு, இலங்கையைப் போன்ற நாடுகளுக்குப் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தும்.

நாட்டின் பொருளாதாரம் ஓரளவு ஸ்திரமடைந்துள்ளதாக கூறப்பட்டாலும், மக்களின் வாழ்க்கைத்தரம் இன்னும் முன்னேற்றமடையவில்லை. தற்போது பணவீக்கம் 2.3 சதவீதம் குறைந்துள்ளது. எனினும் கையிருப்பு 4 பில்லியன் டொலராக உள்ளதாக அரசு கூறினாலும், அது தற்காலிகமானதாகும்.

ஜனவரி தரவுகளின்படி, தனிநபர் ஒருவர் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மாதம் 16,730 ரூபாய் அவசியமாகும். ஒரு குடும்பத்திற்கு மாதம் 70,000 - 80,000 ரூபாய் வருமானம் இல்லை என்றால் தற்போதைய சூழலில் வாழ்வது கடினம்.

மத்திய கிழக்கு மோதல்களால் தொழில்கள் இழக்கப்பட்டால், இலங்கைக்குக் கிடைக்கும் முக்கிய வருமானமான அந்நிய செலாவணி குறையும். வான்வழிப் போக்குவரத்துப் பாதிப்புகளால் சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைந்து, நாட்டின் அந்நியச் செலாவணி வருமானம் சரியக்கூடும்.

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரித்தால், இலங்கையிலும் எரிபொருள் விலை உயர்ந்து மின்சாரம் மற்றும் போக்குவரத்துப் பாதிக்கும்.

போர்ச் சூழலால் ஆடை மற்றும் தேயிலை ஏற்றுமதிக்கான சர்வதேச கேள்வி குறையும் அபாயம் உள்ளது. அதிக வரிப்பளு மற்றும் பொருளாதார நெருக்கடியால் வைத்தியர்கள், விரிவுரையாளர்கள் போன்ற புத்திஜீவிகள் நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

பொருளாதாரத்தை முன்னெடுக்கும் மத்தியதரவர்க்கத்தினர் மீது சுமத்தப்பட்டுள்ள வரிப்பளு குறைக்கப்பட வேண்டும். பொருளாதார வளர்ச்சியின் பலன்கள் ஒரு சிறு கும்பலுக்கு மட்டுமே கிடைப்பதாகத் தரவுகள் காட்டுகின்றன.

அரச வங்கிகளிடம் உள்ள மேலதிகப் பணத்தை முடக்கி வைக்காது, நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்த வேண்டும். சர்வதேச மோதல்கள் தீவிரமடைந்தால், இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் அதலபாதாளத்திற்குச் செல்லும் வாய்ப்புள்ளது.

மக்கள் மீதான வரிப்பளுவைக் குறைத்து, உள்நாட்டு உற்பத்தியைப் பெருக்குவதன் மூலமே நிலையான பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடியும் என பேராசிரியர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

# 2026/2027 உயர்தர தொழிற்கல்வி பிரிவுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

2026 ஆம் மற்றும் 2027 ஆம் கல்வி ஆண்டுக்குரிய உயர்தர தொழிற்கல்வித் துறைக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்களை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இந்தத் தொழிற்கல்வி திட்டத்தின் சிறப்பம்சமாக, க.பொ.த (சாதாரண தர) பரீட்சை பெறுபேறுகள் அனுமதிக்கு கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

2025, 2026 அல்லது கடந்த மூன்று ஆண்டுகளுக்குள் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள், தமது பிரதேசத்தில் இந்தத் துறை வழங்கப்படும் பாடசாலைகளில் இணைந்து கொள்ள முடியும் என அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த கல்வி திட்டத்தின் மூலம் தரம் 12 இல் இணைந்துக்கொள்ளும் மாணவர்கள் மென் திறன்கள் மற்றும் பல்வேறு தொழிற்துறை சார்ந்த அறிமுக பாடங்களைக் கற்பார்கள்.

தரம் 13 இல் அரச தொழிற்பயிற்சி நிறுவனங்களில் நேரடிப் பயிற்சி மற்றும் நிறுவன ரீதியான வேலைத்தளப் பயிற்சிகளை பெறுவார்கள்.

இக்கல்வி முடிவில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட NVQ மட்டம் 4 (NVQ Level 4) சான்றிதழ் வழங்கப்படும்.

சுற்றுலா மற்றும் விருந்தோம்பல், வாகன தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம், சுகாதார சேவைகள், ஆடை வடிவமைப்பு, அழகுக்கலை, மின்சாரம் மற்றும் இலத்திரனியல், விவசாயம், விளையாட்டு மற்றும் விற்பனை முகாமைத்துவம் உள்ளிட்ட 26 இற்கும் மேற்பட்ட பல்வேறுபட்ட தொழிற்துறைகளில் மாணவர்கள் பயிற்சிகளைப் பெற முடியும்.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்கு உயர்கல்விக்கான வாய்ப்புகள், சுயதொழில் முயற்சிகளுக்கான வழிகாட்டல்கள் ஆகியவை கிடைக்கப்பெறும்.

ஆர்வமுள்ள மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை கல்வி அமைச்சின் அதிகாரபூர்வ இணையத்தளமான www.moe.gov.lk இல் (Special Notices பிரிவில்) பெற்றுக் கொள்ளமுடியும் என்பதோடு, 011 278 7136 / 011 278 6746 ஆகிய இலக்கங்களுக்கு தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் directorefa@moe.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரியின் வாயிலாகவும் தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும். (நி)

# அவசரகால சட்டத்தை அரசாங்கம் தேவையற்ற விதத்தில் பயன்படுத்தவில்லை

## பாதுகாப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கம் அவசரகால சட்டத்தை தேவையற்ற விதத்தில் பயன்படுத்தவில்லை என பாதுகாப்பு பிரதி அமைச்சர் மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் கூடியது. இதன் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். ஊழல் மிகுந்த நாட்டையே நாம் பொறுப்பேற்றோம். இருப்பினும் நாட்டு மக்களின் வாழ்வை மேம்படுத்தும் நோக்கிலேயே நாம் அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து வருகின்றோம். அதற்கு சட்டத்தின் ஆட்சி உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பு பாதிக்கப்பட்ட , வங்குரோத்து அடைந்த, நாட்டு மக்களின் வாழ்வாதாரம் வீழ்ச்சி அடைந்த நாட்டையே பொறுப்பேற்க வேண்டியிருந்தது. அதேபோன்று டித்வா சூறாவளி தாக்கம், மற்றும் மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலையால் எம்முடைய நாட்டிற்கு ஏற்படும் தாக்கத்தை கட்டுப் படுத்தி நாட்டு மக்களை முன்னோக்கிய பாதைக்கு இட் டுச்செல்லும் நோக்கிலேயே நாம் அவசரகால சட்டத்தை நீடித்துள்ளோம். (நி)

# அவசரகால சட்டம் அமுலில் உள்ளபோது அமெரிக்க நீர்மூழ்கிக்கப்பல் நுழைந்ததா?

## சபையில் சஜித் கேள்வி



(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் அமுலில் இருக்கும்போது அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் நுழைந்ததா என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச கேள்வி எழுப்பியுள்ளார்.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் பாராளுமன்றம் நேற்று கூடியது. இதன் போதே அவர் இந்தக் கேள்வியை முன்வைத்துள்ளார்.

"எமது நாட்டின் பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் அமெரிக்க நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று வந்திருந்தது என்பது உங்களுக்குத் தெரியாதா? "ஐரிஸ் டென்னா" எனப்படும் ஒரு போர்க்கப்பல் - அது ஒரு "மௌட்ஜ் ரக" போர்க்கப்பல் - அதன் மீது நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றிலிருந்து "மார்க் 48" ரக பாரிய டார்பிடோ ஏவுகணை ஒன்று ஏவப்பட்டது.

தேசிய பாதுகாப்பு மிகவும் உச்சத்தில் இருப்பதாகக் கூறப்படும் ஒரு தருணத்தில், எமது நாட்டின் நிலப்பகுதியிலிருந்து 40 கடல் மைல்களுக்கு அப்பால் ஒரு நீர்மூழ்கிக் கப்பல் வரும்போது, அதைக் கண்டறிய எம்மிடம் மேற்பரப்பு ரேடார் இல்லையா? சோனோபாய்ஸ் இல்லையா? நீருக்கடியிலான சோனார் வலையமைப்புகள் இல்லையா? இழுத்துச் செல்லப்படும் சோனார் கருவிகள் இல்லையா? செயற்கைக்கோள் கண்காணிப்பு வசதிகள் இல்லையா?

நாட்டில் அவசரகாலச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு, தேசிய பாதுகாப்பு மிக உயர்ந்த மட்டத்தில் இருப்பதாகக் கூறப்படும் ஒரு நிலையில்தான் எமது பிரத்தியேக பொருளாதார வலயத்திற்குள் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. இதிலிருந்தே எமது நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள கதியை நாம் புரிந்துகொள்ளலாம்.

இப்போது 208 பேர் காப்பாற்றப்பட்டதாகக் கூறப்பட்டது. அது மிகவும் நல்ல விடயம். அதற்காக எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம் எனத் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை நிலம்...

நாட்டுக்கும் சார்பாகவோ அல்லது மற்றுமொரு தரப்புக்குத் தீங்கு விளைவிப்பதற்கோ பயன்படுத்த ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார சபையில் திட்ட வட்டமாகத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற அமர்வின் போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஈரான் - அமெரிக்கா மோதல் போன்ற சர்வதேசப் பிரச்சினைகள் முழு உலகையும் பாதிக்கின்றன. உலகில் எங்கு போர் நடந்தாலும் பாதிப்பு மனித உயிர்களுக்குத்தான். அதனால்தான் எமது ஜனாதிபதியும் வெளிவிவகார அமைச்சரும் எப் போதும் உலக அமைதிக்காகக் குரல் கொடுத்து வருகின்றனர்.

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்தாலும், எமது அரசின் தன்னம்பிக்கையும் மனச்சாட்சியும் மிகப் பெரியது. சர்வதேச சட்டங்கள் மற்றும் சாசனங்களுக்கு உட்பட்டு நாம் எப் போதும் நடுநிலையான நாடாகவே செயற்படுவோம்.

பிற நாடுகளின் மோதல்களுக்காக எமது வளங்களைப் பயன்படுத்த இட மளிக்கமாட்டோம். மனிதாபிமானத்தை முன்னிறுத்தி, எந்தவொரு தரப்புக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் நடுநிலையான வெளியுறவுக் கொள்கையைத் தொடர்ந்தும் முன்னெடுப்போம் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## அவசரகாலச்...

குறித்த யோசனைக்கு ஆதரவாக 108 வாக்குகளும் எதிராக 08 வாக்கு களும் மாத்திரமே கிடைத்தன.

பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 81ஆம் இலக்க விடயப்பரப்பிற்கு அமைவான இந்த யோசனை 100 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமநாயக்க பாராளுமன்றத்திற்கு அறிவித்தார்.

இதேவேளை, அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் முன் வைக்கப்பட்ட யோசனையும் முறைப் படி நிறைவேற்றப்பட்டது. (ம-7)

## துப்பாக்கி...

இளைஞன் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் மல்லாவி ஒட்டறுத்தகுளம் வடகாடு பகுதியில் இடம்பெற்றது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய ஆறுமுகம் சகிதன் என்ற இளைஞரே படுகாயமடைந்துள்ளார்.

சட்டவிரோதமாகத் தனது உடைமையில் வைத்திருந்த நாட்டுத் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததன் காரணமாக அவர் கடுமையாகக் காயமடைந்ததாக ஆரம்பகட்டத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

காயமடைந்த இளைஞர் உடனடியாக மல்லாவி ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ம-7)

## வெளிநாடு...

யாழ்ப்பாணத்தில் இருந்து ஐரோப்பிய நாட்டிற்கு அனுப்பி வைப்பதாகக் கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவரிடம் முதல் கட்டமாக 30 இலட்சம் ரூபாயை வைத்திய தம் பதியினர் பெற்றுள்ளனர்.

பின்னர் அவரை நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த முகவர் ஒருவரை தொடர்புபடுத்தியுள்ளார். அவர் கம் போடியா ஊடாக வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி , கம்போடியா நாட்டிற்கு அனுப்பி வைத்து, அவர்களை அங்கே அநாதரவாகக் கைவிட்டுள்ளனர்.

தற்போது கம்போடியா நாட்டில் அநாதரவான நிலையில் உள்ள தனது சகோதரியை மீட்டுத் தர உதவுமாறு வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் யாழ்.பிராந்திய காரியாலயத்தில் குறித்த பெண்ணின் சகோதரி முறைப் பாடு செய்துள்ளார்.

அதேவேளை தனது சகோதரியை வெளிநாட்டிற்கு அனுப்பி வைப்பதாகக் கூறி, 30 இலட்சம் ரூபாய் மோசடி செய்த வைத்தியத் தம்பதியினர் மீதும் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ம-7,33)

## அமெரிக்கர்...

துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் நடவடிக்கைகள் வழமை போன்று முன்னெடுக்கப்பட்ட போதிலும் மத்திய கிழக்கு வான்பரப்பு மூடப்பட்டுள்ளதன் காரணமாக உலகளாவிய விமானப் போக்குவரத்து இன்னும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், மத்திய கிழக்கு ஊடாகச் செல்லாத சில வர்த்தக விமான சேவைகளைப் பயன்படுத்த முடியும் எனவும் விமானத் தாமதங்கள் அல்லது இரத்துச் செய்தல்கள் குறித்து அந்தந்த விமான நிறுவனங்களுடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இலங்கையிலுள்ள சுற்றுலாப் பயணிகள் மாற்றுப் பயணத் திட்டங்களை வகுப்பதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், இலங்கை அரசாங்கம் 14 நாட்களுக்கு இலவச விசா நீடிப்பை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளது. (ம-7)

## பய...

9.30 மணிக்கு 77 பயணிகளுடன் சிவகங்கை பயணிகள் படகானது காங்கேசன்துறை நோக்கிப் புறப்பட்டது. அது மதியம் 2.00 மணியளவில் காங்கேசன்துறை துறைமுகத்தினை வந்தடைந்தது.

பின்னர் காங்கேசன் துறை துறை முகத்திலிருந்து 92 பயணிகளுடன் பி.ப 3.00 மணிக்கு நாகப்பட்டினம் நோக்கிப' பயணத்தினை ஆரம்பித்தது.

ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி பருவகால மழை மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக இடைநிறுத்தப்பட்டிருந்த சிவகங்கை பயணிகள் படகானது சுமார் நான்கு மாதங்களின் பின்னர் சேவையினை நேற்று ஆரம்பித்தமை குறிப்பிடத்தக்கது.

வாரத்தில் செவ்வாய் தவிர்ந்த 6 நாட்களும் சேவை இடம்பெறும்.

# கச்சா எண்ணெய் விலை உயரும்

(கொழும்பு)

மத்திய கிழக்குப் பிராந்தியத்தில் தீவிரமடைந்து வரும் மோதல் நிலைமை காரணமாக, உலக சந்தையில் கச்சா எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 150 அமெரிக்க டொலர்கள் வரை உயரக்கூடும் என்றும், இதன்மூலம் புதிய எரிசக்தி நெருக்கடி உருவாகும் அபாயம் உள்ளதாகவும் கட்டார் எரிசக்தி அமைச்சர் சாத் அல்-காபி எச்சரித் துள்ளார்.

யுத்த மோதல்கள் விரைவில் முடிவுக்கு வந்தாலும் அதன் தாக்கங்கள் வழமைக்குத் திரும்புவதற்கு நீண்ட காலம் எடுக்கும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-7)

இரு வழிக்கட்டணமாக 28500 இலங்கை ரூபாய் அறவிடப்படுகின்றது. (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2026.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 6125
E 4 7 1 6 5 1
அத சம்பத
E 1 6 5 1
சீட்டிழுப்பு இலக்கம் 0700
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.03.06
0241
துலாம் 08 39 57
5725

தன நிதானய
திகதி - 2026.03.06
சீட்டிழுப்பு இலக்கம் - 2155
C 24 56 79 80 C

மெகா பவர்
திகதி 06/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2473
K 22 23 35 37 63

ஜய ஜய JAYA
திகதி 2026.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 0393
T 6 9 7 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4367
சீட்டிழுப்பு திகதி 06.03.2026
E 21 44 64 70
E

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.06
சீட்டிழுப்பு இலக்கம் 1434
இடபம் 12 22 44 58 இடபம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
06.03.2026 வெற்றி வாரம் 0833
M 5 6 8 7 3 7
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,015,974.40

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3099
சீட்டிழுப்பு திகதி 2026.03.06 தினம் வெள்ளிக்கிழமை
38 64 70 74 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 104,577,227.20

சனிதா
திகதி 06.03.2026 வெற்றி வாரம் 5260
17 45 66 73 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,990,440.80

சசிரி
வெற்றி வாரம் 929
சீட்டிழுப்பு 06.03.2026 வெள்ளிக்கிழமை
12 28 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.4,164,480.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4811
சீட்டிழுப்பு திகதி 06.03.2026 தினம் வெள்ளிக்கிழமை
09 21 23 43 மிதுனம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,365,443.60

கப்ருக
C 30 08 31 44 70
2275
06.03.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.177,271,408.00

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 2925
சீட்டிழுப்பு திகதி 2026.03.06
38 39 60 76 V
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.97,635,793.60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01.வட்டுக்கோட்டை, இந்து, 1988, பூசம், Data Analysis, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(45522)

02.K.K.S. இந்து, 1993, விசாகம், Masters, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(43203)

03.இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Surveyor, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34984)

04.நீர்வேலி - புலோலி, இந்து, 1991, பூரட்டாதி, Bsc, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(32143)

05.காரைநகர், இந்து, 1989, சித்திரை, Bachelor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(41733)

06.கொக்குவில் - உடுவில், இந்து, 1988, திருவோணம், Civil Engineer, Australia Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(52796)

07.வட்டுக்கோட்டை, இந்து, 1992, விசாகம், CIMA Fully Qualified, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33308)

08.உரும்பிராய், இந்து, 1979, கேட்டை, Travel and Tourism management, Divorce, Newzealand Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

09.வண்ணார்பண்ணை, இந்து, 1987, சித்திரை, Masters, (MBA), Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.

10.திருநெல்வேலி, இந்து, 1994, ஆயிலியம், Bsc in computer science, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34159)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு. (6989)

**S.Sharma J.P** | 077 803 8193
www.thaalee.com | 077 539 3728

## ஈரான் கப்பல்...

உரிமை இருந்தது. ஆனால் இந்தியா, அதனை இலங்கை பக்கம் திருப்பி விட்டு தப்பித்துக்கொண்டுள்ளது. அதனால் அரசாங்கம் யாரையும் அதிகம் நம்பி செயற்படக் கூடாது என எதிர்க்கட்சி உறுப்பினர் சாமர சம்பத் தஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (06) இடம்பெற்ற அவசரகால சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்துக்கு நீடித்துக்கொள்ளும் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டின் தற்போதைய நிலையில் குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதற்கு நாங்கள் முயற்சிப்பதில்லை. ஆனால் அரசாங்கம் இன்று எதிர்க்கட்சியில் இருந்திருந்தால், இன்று கொழும்பில் பாரிய ஆர்ப்பாட்டம், போராட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கும்.

இந்தியாவுக்கு எதிராக நீங்கள் தெரிவித்த விடயங்கள் எங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த சபையில் இருக்கும் அதிகமானவர்கள் இந்தியாவுக்கு எதிராகக் கதைக்க மாட்டார்கள். ஆனால் நான் அப்படியல்ல. கடற்படை பயிற்சி முகாம் எமது நாட்டில் நடத்தவில்லை. கடந்த மாதம் 18 ஆம் திகதி இந்திய விசாகப்பட்டினத்திலே இடம்பெற்றது.

ஆனால் ஈரான் கப்பல் தாக்கப்பட்ட விடயத்தில் இந்தியா லாவகமாக எமது நாட்டுக்கு அதனை திசை திருப்பி இருக்கிறது.

இந்தியாவுடன் உங்களது ஜனாதிபதிக்கு தோல்மேல் கை போட்டுக்கொண்டு இருக்கச் சொல்லுங்கள். ஆனால் முதுகில் குத்தும்வரை தெரியாமல் இருக்கும்.

ஈரானின் இரண்டாவது கப்பலை இந்தியா எடுப்பதாக நீங்கள் இந்த சபையில் தெரிவித்து வந்தீர்கள். ஆனால் இரண்டாவது கப்பலையும் இந்தியா எமக்கு தள்ளிவிட்டார்கள்.கடற்படையின் பயிற்சி எமது நாட்டிலா இடம் பெற்றது? எனக் கேட்கிறேன். இந்தியாவில் தானே இடம் பெற்றது. இந்தியா லாவகமாக இரண்டு கப்பல்களையும் எமது பக்கம் தள்ளிவிட்டார்கள்.

இந்தியா என்பது எம்மைப் போன்று சிறிய நாடு அல்ல. உலகில் இருக்கும் பலம் பொருந்திய நாடுகளில் ஒன்று. அப்படியான நாடு, இந்த விடயத்தில் மௌனம் காத்து, பந்தை எமது பக்கம் எறிந்துவிட்டு தப்பித்துக்கொள்ள பார்க்கிறார்கள்.என்றாலும் ஈரானின் இரண்டாவது கப்பலைப் பாதுகாத்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன் என்றார். (ம-7)

## SCIENCE PEARL

பெருமாள் கோவில் முன் யாழ்ப்பாணம்

# A/L 2028

## கணித, உயிரியல்

**புதிய பிரிவு ஆரம்பம்**

11.03.2026 (மாலை 3 மணி)

| | |
|---|---|
| இரசாயனவியல் | J.J.கொலின்ஸ்(BSc,MSc) |
| | T.லக்சன்(BSc) |
| பௌதீகவியல் | M.ஆனந்தன்(BSc, PGDE) |
| உயிரியல் | A.S.செல்வநேசன் (BSc,Hons),(CIMB-Zoology) |
| இணைந்த கணிதம் | B.மயூரன்(BSc) |

(6979)

Special Batch (English medium)
DAY CLASS 16.03.2026 (மாலை 3 மணி)

**077 703 1125**

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (6964)

**076 889 1308**
**077 606 1333**

வடமராட்சி மண்ணில்
63 வருட நீண்ட கல்விச் சேவையில்...

## சதாபொன்ஸ் கல்வி நிலையம்

**2028 ம் ஆண்டுக்கான வர்த்தகப்பிரிவு வகுப்புகள் ஆரம்பம்**

**07.03.2026 சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு**
**அனுமதிகள் இன்று முதல்**

மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகளே வழங்கப்படும்.
நல்ல பெறுபேறுகளையும்,
மாணவர்களை தொகையாக பல்கலைக்கழகம் அனுப்பிய வழமையான ஆசிரியர் குழாம் உள்ள ஒரே மையம்
என்றும் உங்கள் சேவையில்... (C-5126)

யாழ்-பருத்தித்துறை வீதி, மாலி சந்தி, அல்வாய்.
077 309 5176, 076 126 0105
021 226 3206

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 26 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகு வழி வேம்படி வீதியில்
- யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதியில் இருந்து 300m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள், பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்துக்குள்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை முன் காணித் துண்டு - 3200000/= (முப்பத்திரண்டு இலட்சம்)
- நடுக் காணித் துண்டு - 2800000/= (இருபத்தி எட்டு இலட்சம்)
- பின் காணித் துண்டு 2600000/= (இருத்தி ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(2118)

**074 029 2338, 076 990 3039, 077 288 0152**

## 25வது பிறந்த நாளில் மீளாத நினைவுகளுடன்...

செல்வி **டக்சாயினி சத்தியநாதன்**
(கிளி/சென்.திரேசா பெண்கள் கல்லூரி 2007, 2008 மாணவி)

மனம் மகிழ 07.03.2001 | மனம் துடிக்க 10.04.2009



துருதுருக்கும் உன் விழியும்
சிரிப்பும் எங்களைத் தினமும்
வாட்டுதே! நீ என்றும்
எம் நினைவுகளில்
வாழ்கின்றாய்

உன் மீளாத நினைவுகளுடன்:-
அம்மா, அக்கா, தம்பி,
அத்தான், மகன், அம்மம்மா,
மாமாமார், அத்தைமார்,
மச்சான்மார், மச்சாள்மார்

A9 வீதி, கந்தசுவாமி கோவிலடி, கிளிநொச்சி. (6982)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட
அமரர் **குருநாதன் தையல்நாயகி**

தோற்றம் 15.04.1939 | மறைவு 05.02.2026



சுவாசம் போலிருந்த உங்கள் அன்பு
நினைவாக மட்டும் எஞ்சியிருக்கிறது
நாங்கள் தடுமாறும் போதும்
உங்கள் கைகளைத் தேடுகின்றோம்
ஆனால் விரல்களில் தொட்டுச்
செல்வது என்னவோ
கண்ணீரின் துளிகள் மட்டுமே அம்மா...
(2116)

1 ம் வட்டாரம்,
வேலணை கிழக்கு.

உங்கள் நினைவுடன்
மகன் சதீஸ்(ஆசிரியர்)
யா/வேலணை மத்திய கல்லூரி

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.252, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org